என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்


நவ 27
மாவீரர் நாள்

September 2016

FREE ISSUE


# லண்டன் தமிழர் தகவல்

## London Tamil's Information



மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest



Lakshamis Jewellers
லண்டனில்
No1
நகை
மாளிகை
indiglamour.com
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை



BUCKINGHAM PALACE

12th September, 2016.

Dear Mr. Jothi,

The Queen has asked me to convey her thanks for the message you have sent on behalf of *Tamil Information*, with which you sent the one-hundred and fifty-fifth issue of the publication, for Her Majesty's ninetieth birthday.

The Queen greatly appreciated your kind words and, in return, Her Majesty has asked me to send her warm good wishes to you and all concerned.

Yours sincerely,

Christopher Sandamas

Christopher Sandamas
Chief Clerk to The Queen

Mr. Sivanatha Jothi.



# தமிழர் தகவல்
# Tamil Information


பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்

திருவள்ளுவர் ஆண்டு 2047
புரட்டாசி
மலர் : 15
இதழ் : 160
செப்டம்பர் - 2016



முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
தமிழ் அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com



படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே



4000 பிரதிகள்


தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!


நல்ல பொருள்கள் வேண்டுமா கணேஷா தமிழ் கடைக்கு வாங்க

UNLEASH
THE POWER OF GOLD
THARANI

JEWELLERY & PAWNBROKERS
STARTING FROM 2.95% PER MONTH

GOLD
LOANS

THE CHEAPEST GOLD
LOAN PROVIDEDR IN WEMBLEY

* NO Need to Sell Your Valuable Jewellery, When You can Get Quick Loan and Easy Terms.
* Use Your Idle Jewellery for Productive Purpose by Availing Our Loans.
* Loans Against Gold from 2.95% per Month, it's U.K's lowest Rate for Gold Loans.
* Cheaper than Unauthorised Overdrafts from High Street Banks.
* No Credit Check Required
* Simple Procedure. Loan sanctioned in Just 5 Minutes.

Our Rates of Interest

£100 to £4999 2.95 % Per Month
APR 38.7%


Loan Term: Up to 6 Months
Documents Required
Photo ID - Passport or UK Driving Licence
Proof of Address - Any Utility Bill or Bank Statement not Older than 3 Months

Terms and Conditions

The maximum loan term is for 6 months. If loan cannot be repaid during this period, a renewable can be made, after interest on the loan is paid in full.

If you have borrowed £75 or less, and if you redeem the loan in 6 months time, we will keep the pledged Gold. If you have borrowed more than £75 we are entitled to sell your pledge to cover the outstandings. The pledge


வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!


BRINGING
GREAT
FOOD
TO
LIFE...
NO 1
Brand
BRAND
Niru
Nelli
ORANGE SODA
Quento
FALUDA
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk




நல்ல பொருள்கள் வேண்டுமா கணேஷா தமிழ் கடைக்கு வாங்க

# சக்தியின் நாட்டிய அரங்கேற்றம்





உதயகுமார் தம்பதிகளின் ஏகபுதல்வி சக்தியின் பரத நாட்டிய அரங்கேற்றம் செப் 25 ஆம் திகதி hayes beck theatre இல் சிறப்பாக நடைபெற்றது.

பிரதம விருந்தினராக சிவசக்தி சிவநேசன் கலந்து சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியினை 'எஸ்.கே.குணா' சிறப்பாக தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியமைப்பு ஆங்கிலத்தில் அமைந்திருந்தாலும் அதனை சிறந்த தமிழிலும் தொகுத்து வழங்கியிருந்தமை பாராட்டுக்குரியது.

விஜயகுமாரி ஐங்கரனின் சிறந்த மாணவியான சக்தியின் அரங்கேற்றம் 'யாதவன்' பாட்டில் மெருகேறியது. பாலச்சந்திரன், ஜலதரன், பி. ஞானவரதன் ஆகியோரின் பக்கவாத்யங்கள் சிறப்பு.

மொத்தத்தில் சக்தியின் அரங்கேற்றம் ரசிக்கும் வகையில் அமைந்திருந்தது.




புதிய பொலிவுடன் இனிதே உங்கள் இல்லம் நோக்கி வருகிறது

**ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் தொலைக்காட்சி**

24 மணிநேரமும் கீழ்கண்ட தளங்களில் அம்மனை தரிசித்து மகிழுங்கள்...

**www.ammanealing.org** என்ற இணையத்திலும்,

சாலை டிவி மற்றும் **Smart Phone, Ipad, Tablet**

மேலதிக விபரங்களுக்கு :

**5 Chapel Road, London W13 9AE**

**email:** info@ammanealing.org, **Phone:** 0044 - 208 810 0835

Charity No: 1014409

**நல்ல பொருள்கள் வேண்டுமா கணேஷா தமிழ் கடைக்கு வாங்க**

"Ammanai Saran Addainthal Athika Varamperalam"

**SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST** Founded on 10-08- 1991 Charity No: 1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE. TEL: 020 8810 0835/020 8840 0485

www.ammanealing.com Email: info@ammanealing.org

கோவிலின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தில் 1/3 பகுதி ஈழத்தில் அவதியுறும் மக்களைப் பராமதிப்பதற்கென பயன்படுத்தப்படுகிறது.

# முச்சக்கர வண்டி ஒன்றிற்கான பெறுமதி £50 பவுண்கள்.

## ஆலயத்தின் சார்பாக 100 வண்டிகள் வழங்கி உதவும் நோக்கத்தில் அடியவர்களின் நன்கொடைகளை எதிர்பார்த்துள்ளோம்.

**அவயங்களை இழந்து வலுவிழந்து துயருறும் ஈழமக்களின் வாழ்வைக் கட்டி எழுப்ப உங்கள் ஆதரவை அள்ளி வழங்குங்கள்.**

**Bank Details Name: SKTA Temple Trust - W139AE LLOYDS BANK**
**SORT CODE: 30-98-91 | ACCOUNT NO: 02717646**








நல்ல பொருள்கள் வேண்டுமா கணேஷா தமிழ் கடைக்கு வாங்க






லோகன் மண்டபத்தில் நடைபெற்ற இரட்டை அரங்கேற்றம் ரசிக்கும் வண்ணமாக இருந்தது.

கேசவன், ரஜேஷ் தம்பதிகளின் புத்திரி அவர்களின் வாய்பாட்டு அரங்கேற்றம் வாய்ப்பாட்டுக்கு புத்திரன் ரம்மியனின் மிருதங்கமும் சிறப்பாக அமைந்திருந்தது.

சுகிர்தகலாவின் நெறியாள்கையில் கச்சேரி அமைந்து இருந்தது.

ரம்மியனின் புல்லாங்குழல் அரங்கேற்றமும் அதே மேடையில் நடந்தேறியது. புல்லாங்குழல் ஆசிரியர் ஞானவரதனின் நெறியாள்கையில் நடைபெற்றது.

இரண்டு அரங்கேற்றத்துக் மிக்க வித்தியமாக ஜெயராமன் பத்மநாதன் ரகுராமன் நல.பிரகால அருணன் ஞானப்பிரகாசம் துஷன தர்மதுரை ரேனுகா சிவம் இவர்கள் சிறப்பு சேர்த்தனர்.

# சைவமும் தமிழும்
## இரு கண்கள்!

உலகமெலாம் சைவநெறி தழைத்தோங்கச் செய்வதே சைவ சமயத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரின் முதல் கடமையாக இருக்க வேண்டும். அதற்கு, சைவ வழிபாட்டிலும், அதையொட்டிய சிறப்பு நாள்களைக் கொண்டாடுவதிலும் முன்னோர் வகுத்த நெறிகளை வழுவாமல் கடைப்பிடிக்க வேண்டும்.. அதைப் பிள்ளைகளுக்கும் பயிற்றுவிக்க வேண்டும்.

நவராத்திரி, கந்த சஷ்டி, சிவராத்திரி ஆகிய மூன்றும் சைவ சமயத்தின் முக்கிய விழாக்கள். இந்த விழாக்களை மரபு மாறாமல், எந்நாடு சென்றாலும் ஈழத்தமிழர்களாகிய நாம் கொண்டாடி வருகிறோம்.. கொண்டாட வேண்டும். இந்த விழாக்களின் தன்மைகளை, அவற்றின் உள்ளடக்கத்தை நம் குழந்தைகளுக்குச் சொல்லி வளர்த்தால்தான், எதிர்காலத்தில், சைவத்தை முன்னெடுத்துச் செல்பவர்களாக அவர்கள் உருவாக வழி ஏற்படும்.

உலகமெங்கும் பரவிக்கிடக்கும் ஈழத்தமிழர்கள், கொண்டாடும் மற்றொரு திருவிழா, தைப்பொங்கல் விழா. தமிழர்தம் தனிப்பெரும் விழாவாம் தைப்பொங்கலை, அதற்குரிய சிறப்புக்களோடு கொண்டாடி வருகிறோம்..

சைவமும் தமிழும் நம் இரு கண்கள்.. அவற்றைக் காப்பது நமது கடமை!

சைவநீதி இதழிற்காக எழுதப்பட்ட
தலையங்கம், தேவை கருதி
தமிழர் தகவல் இதழிலும்
இடம்பெறுகிறது

இரத்தினம் நித்தியானந்தம்

வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில், நெடுவேள் நிலை இய காமர் வியன் துறை என்று புறநானூறும், சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண் குன்றும் ஏரகமும் நீங்கா இறைவன் என்று சிலப்பதிகாரமும் திருச்செந்தூரைப் போற்றுகின்றன.

கடல் அலைகள் வருடுவதால் திருச்சீரலைவாய் என்றும், முருகப்பெருமான் தாரகாசுரனையும், கிரௌஞ்ச மலையையும் அழித்து விட்டு, வீரபாகுத் தேவர் மற்றும் தன் படைகளுடன் திருச்செந்தூரில் வந்து தங்கினார். அவர் அசுரனை வெற்றி கொண்ட பிறகு ஈசனை வழிபடுவதற்கு தேவ தச்சன் மயனை அழைத்து கோயில் ஒன்றை எழுப்பினார். அதுவே இன்று நாம் காணும் திருச்செந்தூர் கோயில். வியாழ பகவானால் பூஜிவால்மீகி ராமாயணத்தில் 'கபாடபுரம்' குறிப்பிடப்பட்டிருப்பதால்,

# திருச்செந்தூர் ஸ்ரீசெந்திலாண்டவர்



சூரபதுமனை வென்ற தலம் ஆதலால், ஜயந்திபுரம் என்றும் அழைக்கப்படுகிறது. கபாடபுரம், அலை வாய், கந்தமாதன மலை, திருச்செந்தில் என்ற வேறு பெயர்களும் உண்டு.

'சிக்கலில் வேல் வாங்கி, செந்தூரில் சூர சம்ஹாரம்' என்பது பழமொழி. தேவர்களின் படைத் தளபதியாக நியமிக்கப்பட்ட ஆறுமுகன், சூரபத்மன் மீது படையெடுத்தார். வழியில் எதிர்ப்பட்ட ராமாயண காலத்துக்கு முன்பே திருச்செந்தூர் புகழ் பெற்றிருக்கிறது என்பதை அறியலாம். இது வியாழ க்ஷேத்திரமாகவும் போற்றப்படுகிறது.

ஓரெழுத்தந்தாதி, திரிபு அந்தாதி, பதிற்றுப்பத்து அந்தாதி, யமக அந்தாதி, வெண்பா அந்தாதி, நிரோட்டக யமக அந்தாதி, சுப்பிரமணிய அந்தாதி, முருகன் கலித்துறை அந்தாதி, திருச்செந்தில் உலா, திருச்செந்தூர் மாதாந்தக் கலித்துறை,

திருச்செந்தூர் வழிநடைச் சிந்து, திருச்செந்தூர்க்கோவை, திருச்செந்தூர் ஷண்முக சதகம், திருச்செந்தூர் நொண்டி நாடகம், தசாங்க வகுப்பு, திருச்செந்தூர் தல புராணம், வழி நடைப்பதம், திருச்செந்தில் பதிகம், திருச்செந்தில் நவரச மஞ்சரி, திருச்செந்தில் சந்த விருத்தம் என்று திருச்செந்தூர் பற்றிய நூல்கள் ஏராளம்.

1. செந்திலாண்டவன் ஆலயம் (ஓம்) பிரணவத்தை அடிப்படையாகக் கொண்டு, வாஸ்து லட்சணங்களோடு கட்டமைக்கப்பட்டுள்ளது. கோயில் வடக்கு தெற்காக 300 அடி நீளமும் கிழக்கு மேற்காக 214 அடி அகலத்துட னும் அமைந்துள்ளது. இதன் பிரதான வாயில் தெற்கு நோக்கியது.

2. கோபுரம், யாளி மண்டபத்துக்கு மேல் 137 அடி உயரமும், 90 அடி நீளமும், 65 அடி அகலத்துடனும் திகழ்கிறது. இதன் ஒன்பதாவது மாடத்தில் கடிகார மாளிகை இருக்கிறது.

3. மேற்கு ராஜ கோபுரம், தெய்வானை திருமணம் நடைபெறும்போது மட்டும் திறக்கப்படும்.

4. முதல் பிராகாரத்தில் தெற்கில் ஜெயந்திநாதர் எனப்படும் குமாரவிடங்கப் பெருமான் வள்ளி தெய்வானையுடன் காட்சி தருகிறார். தென்மேற்கில் வள்ளிக்கும், வடமேற்கில் தெய்வயானைக்கும் தனித் தனிச் சந்நிதிகள் உள்ளன.

5. மேற்கில் சங்கரநாராயணர், காசி விசுவநாதர் விசாலாட்சி, வேதபுரீசுவரர், திருவாதபுரீசுவரர், நாகநாத சோமேசுவரர் ஆகியோரது சந்நிதிகள் உள்ளன. வடக்கில் மாணிக்கவாசகர், காரைக்காலம்மையார், சிவகாமி நடராஜர், சனீஸ்வரர், பைரவர் சந்நிதிகள் இடம் பெற்றுள்ளன. தவிர இங்கு ஏழுமலையானுக்கும், சந்தான கிருஷ்ணனுக்கும் தனிச் சந்நிதிகள் உள்ளன.

6. இரண்டாம் பிராகாரத்தின் மேற்கில் ஸித்தி விநாயகர், சகஸ்ரலிங்கம், ஆன்மநாதர், மனோன் மணி அம்மை, பானுகேசுவரர், சோமசுந்தரர், மீனாட்சியம்மை, திருமூலநாதர், திருக்காளத்தி நாதர் (வாயு லிங்கம்), உமா மகேஸ்வரி, அருணாசலேசுவரர் (தேயு லிங்கம்), உண்ணாமுலையம்மை, ஜம்புகேசுவரர் (அப்பு லிங்கம்), வன்மீக நாதர் (பிருதிவி லிங்கம்), அருணகிரிநாதர், வல்லப கணபதி ஆகியோரின் சந்நிதிகள் உள்ளன. இதன் தென்பகுதியில், முதல் பிராகாரம் செல்லும் வாசலில் வீரகேசரியும், வீர மார்த்தாண்டரும் காவல் புரிகின்றனர். இங்கு, நவக்கிரகங்கள் கிடையாது. ஆனால், சனி பகவானுக்குத் தனிச் சந்நிதி உண்டு

7. இந்தத் தலத்தை வீரபாகு க்ஷேத்ரம் என்றும் அழைப்பார்கள். அர்த்த மண்டபத்தில் வீரபாகு, வீர மகேந்திரர் காவல் தெய்வங்களாக விளங்குகின்றனர். செந்திலாண்டவனுக்கு பூஜை செய்யும் முன்பு, முதலில் வீரபாகுவுக்கு பூஜை செய்து 'பிட்டு' படைத்து வழிபடுகின்றனர்.

8. ஸ்ரீசெந்திலாண்டவர் ஒரு முகம், நான்கு திருக்கரங்களுடன் நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கிக் காட்சியளிக்கிறார். மூலவருக்கு குமார தந்திர முறையிலும், சண்முகருக்கு, சிவாகம முறையிலும் பூஜைகள் நடைபெறுகின்றன. இங்கு மூலவர் தவக் கோலத்தில் இருப்பதாக ஐதீகம். எனவே அவர் கையில் வேலும் அருகில் தேவியரும் இல்லை.

9. கருவறையின் பின்புறத்தில் ஐந்து லிங்கங்களும் கருவறைக்குள் மூன்று லிங்கங்களும் உள்ளன. இவற்றை அஷ்ட லிங்கங்கள் என்பர். அஷ்ட லிங்கங்களும் இங்கு இடம்பெற்றிருக்கக் காரணம், இறைவன் சூரிய சந்திரராகவும், பஞ்ச பூதங்களாகவும், உயிர்களாகவும் விளங்கு கிறார் என்பதை விளக்குவதற்காகவே!

10. முருகன் சந்நிதியில் முருகனுடன் பஞ்ச லிங்கங்களைக் கண்ணாலும், மற்ற லிங்கங்களை மனதாலும் பூஜிக்க வேண்டும்.

அப்போதுதான் நமது பிரார்த்தனை முற்றுப் பெறும். அஷ்ட லிங்கங்கங்களில், பஞ்ச லிங்கங்களுக்கு பூஜை நடக்காது. ஏனெனில், முருகப்பெருமானே இந்த லிங்கங்களுக்கு பூஜை செய்வதாக ஐதீகம்.

11.திருச்செந்தூரில் முருகப் பெருமான் ஐம்பெரும் தெய்வமாக வணங்கப்படுகிறார். அவருக்கு மஞ்சள் பட்டாடை மஞ்சள் மலர் மாலை அணிவித்து நான்முகனாகவும், நீல மலர்கள் நீல வண்ண ஆடைகளை அணிவித்து திருமாலாகவும், சிவப்பு நிற ஆடைகள் சிவப்பு மலர்களை அணிவித்து அரனாகவும், வெண்பட்டு வெண மலர்களால் அலங்கரித்து மகேசனாகவும், பச்சை சார்த்தி சதாசிவனாகவும் போற்றப் படுகிறார். இங்கு நாள்தோறும் ஒன்பது கால வழிபாடுகள் நடைபெறுகின்றன. மார்கழி மாதம் மட்டும் பத்து கால பூஜை நடைபெறுகிறது.

12.மூலவருக்கான நைவேத் தியத்தில் காரம், புளி ஆகியவற்றைச் சேர்ப்பதில்லை. சண்முகருக்கான நைவேத்தியங்களில் காரம், புளி உண்டு. பருப்புக் கஞ்சி, தோசை, தேன்குழல், அதிர சம், அப்பம், பிட்டமுது, தினைமாவு ஆகியவை இடம் பெறுகின்றன. உதய மார்த்தாண்ட பூஜையின்போது தோசை, சிறுபருப்புக் கஞ்சி ஆகியவை நைவேத்தியத்தில் இடம் பெறுகின்றன. இரவு நேர பூஜையில் பால், சுக்கு, வெந்நீர் ஆகியன நிவேதிக்கப்படுகிறது.

13.மூலவரின் தலைக்கு மேல் பெரிய வெள்ளிப் பாத்திரம் ஒன்றைக் கட்டித் தொங்க விட்டு, அதில் பால் நிரப்பி, சிறு துவாரத்தின் வழியாக பாலை தாரை தாரையாக மூலவரின் மேல் விழச் செய்து சுமார் மூன்று மணி நேரம் நடைபெறும் தாராபிஷேகம் இந்தக் கோயிலின் சிறப்பு.

14.மூலவரின் உற்சவர் அலைவாய் உகந்த பெருமான். ஐம்பொன் திருமேனி. நவராத்திரி நாள்களில் பாரிவேட்டை, சிறுத்தொண்டர் திருநாள், தைப் புனர்பூசம், பூசம் ஆகிய



நாட்களில் இவர் எழுந்தருளுகிறார். இவரை தோழன்சாமி என்பர். வள்ளி தெய்வானை இவருக்கு அருகில் உள்ளனர். திருவிழாக்களின்போது சந்திகளில் உலா வருவதால், இவர் சந்திச்சாமி என்றும் அழைக்கப்படுகிறார்.

15.இரவு சுமார் 9:45 மணிக்கு சுவாமிக்குத் திரையிட்டு தீபாராதனை காட்டுகின்றனர். பிறகு ஆறுமுகனின் முன் பள்ளியறை சொக்கரை வைத்துத் தீபாராதனை செய்வர். இதை ரகசியத் தீபாராதனை என்கிறார்கள்.

16.உலோகத் திருமேனியரான ஆறுமுகப் பெருமானுக்கு ஆண்டுக்கு 36 தடவை மட்டுமே அபிஷேகம் நடைபெறுகிறது. இதில் விபூதி அபிஷேகம் சிறப்பு வாய்ந்தது.

17.திருவிழாவின்போது ஒரு நாள் 'தங்க ஆடு' வாகனத்தில் அஜாரூடராகக் காட்சி தருகிறார் செந்திலாண்டவர்.

18.ஆறுமுகப் பெருமானின் உற்சவர் குமாரவிடங்க பெருமான். திருமணங்களுக்கு இவரே எழுந்தருளுவதால் மாப்பிள்ளைச்



முருகன், பிரம்மன், விஷ்ணு, சிவன், கலைமகள், மகாலட்சுமி ஆகியோரைக் குறிக்கும் என்பர்.

21. அசுரனை வதம் செய்ததால், திருத்தணி மற்றும் பழநி தலங்களில் உள்ளது போல் க்ஷத்திரிய வடிவில் முருகன் இங்கு காட்சி தருகிறார். எனவே, மேற்குறிப்பிட்ட தலங்களில் தோஷ பரிகாரமாக நடைபெறும் 'சேவல் விடும்' நேர்த்திக் கடன் இங்கும் நடைபெறுகிறது.

22. தலத்தின் சிறப்பம்சம் இலை விபூதி பிரசாதம். செந்தூரில் தேவர்கள் பன்னீர் மரங் களாக உள்ளனர் என்பது ஐதீகம். பன்னிரு நரம்புகள் உள்ள பன்னீர் மர இலைகளில் வைத்துத் தரப்படுவதே இலை விபூதி பிரசாதம். முருகப்பெருமான் தன் 12 கரங்களால் விசுவாமித்திரரின் காசநோய் நீங்க திருநீறு அளித்ததன் தாத்பர்யம் இது. சூரபதுமன் வதம் முடிந்த பின் முருகப்பெருமான் தன் பரிவாரங்களுக்கு, 12 கைகளினால் விபூதிப் பிரசாதம் வழங்கினார் என்றும் கூறுவர்.

23. மீன் பிடிக்கும் பரதவர் குலத்தில் பிறந்த தெய் வானையை முருகப் பெருமான் மணந்ததாக பரதகுல பாண்டிய வம்ச நூலில் உள்ளதால், பரதவர்கள் முருகனை, 'மச்சான் சாமி' என்கின்றனர்!

24.காயத்ரி மந்திரத்தின் எழுத்துகளே இங்கு 24 தீர்த்தங் களாக விளங்குகின்றன என்பது ஐதீகம்.

25.முருகன் கோயிலுக்கு அருகே, கடற்கரையையட்டி இருக்கும் வள்ளிக் குகை தரிசிக்க வேண்டிய ஒன்று.

26.முருகப்பெருமான், படை வீரர்களின் தாகம் தணிக்க வேலாயுதத்தால் நீர் ஊற்று ஒன்றை ஏற்படுத்தியதாக 'கந்த புராணம்' கூறுகிறது. அதை 'ஸ்கந்த புஷ்கரணி' என்பர். ஒரு சதுர அடி பரப்பளவில் திகழ்கிறது. ஒரு படியைக் கொண்டு முகக்கும் அளவே நீர் இருப்பதால், ஒருபோதும் வற்றாத இதற்கு நாழிக் கிணறு

சாமி எனப்படுகிறார்.

19.ஆறுமுகப் பெருமானின் ஆறு முகங்களுக்கும் நடை பெறும் ஆறுமுக அர்ச்சனை சிறப்பானது. ஆறு பண்டிதர்கள் முருகனின் ஆறு முகங்களின் முன் நின்று திருநாமங்களைப் பாட, சிவாச்சார்யர்கள் 6 பேர் மலர் தூவி அர்ச்சனை செய்வதுதான் ஆறுமுகார்ச்சனை எனப்படுகிறது. அப்போது ஆறு திருமுகங்களுக்கும், ஆறு வகையான உணவு படைக்கப்படுகிறது. ஆறு தட்டுகளில் கற்பூரம் ஏற்றி தீபாராதனை காட்டப்படும்.

20. முருகனின் ஆறுமுகங்களும் ஆறு விதமான செயல்களைச் செய்வதாக ஐதீகம். உலகுக்கு ஒளி தருவது ஒரு முகம், வேள்விகளைக் காப்பது இன்னொரு முகம், அடியார் குறை தீர்ப்பது மற்றொரு முகம், வேதாகமப் பொருளை விளக்குவது பிறிதொரு முகம், பகைவனையும், தீயோனையும் அழிப்பது வேறொரு முகம். தேவியருக்கு மகிழ்ச்சி தருவது ஆறாவது முகம். இவரது ஆறுமுகங்களும் முறையே சஷ்டி கோலம் கொண்ட

எனப் பெயர். இதில் நீராடிய பிறகே கந்தபெருமானை தரிசிக்க வேண்டும்.

27.போர் நடந்த இடம் ஆதலால், செந்தி லாண்டவன் கோயில் அருகில் உள்ள கடல் நீர் சற்றே சிவந்து ரத்த நிறமாயிருக்கிறது.

28.மார்கழித் திருவாதிரை திருமுழுக்கின் போது அபிஷேகத்துக்குப் பிறகு திருச்செந்தூர் நடராஜருக்கு முருகப் பெருமானின் அணி கலன்கள் அணிவிக்கப்படுகின்றன.

29.உச்சிக் காலம் முடிந்ததும், மேளதாளத்துடன் கடற்கரைக்குச் சென்று கங்கைக்கு சுத்த அன்னம் படைக்கப்படுகிறது.

30.மாமரமாக மாறிய சூரபதுமனை வேலாயுதத்தால் முருகப் பெருமான் இரண்டாகப் பிளந்தார். அதன் ஒரு பகுதி சேவலாகவும், மற்றொன்று மயிலாகவும் மாறியது. அதனால் இங்கு மாமரங்கள் வளர்வதில்லை.

31..இங்குள்ள சண்டிகேஸ்வரருக்கு புதிய மாலைகளை சாத்த மாட்டார்கள். மூலவருக்கு சாத்திக் கழித்த மாலையையே சண்டி கேஸ்வரருக்கு அணிவிக்கிறார்கள்.

32.மூலவர் சந்நிதி இரவில் அடைக்கப்பட்டதும் இங்கு அமைந்துள்ள பைரவர் சந்நிதியில் சாவியை வைக்கிறார்கள். இவரது சந்நிதியில் உள்ள விளக்கில் இருந்து வேறொரு விளக்கில் அக்னியை ஏற்றிச் சென்றுதான் மடைப்பள்ளி அடுப்பைப் பற்ற வைக்கிறார்கள். இரவில் இவருக்கு வடை நைவேத்தியம் செய்யப்படுகிறது.

33.முருகனின் வாகனமான மயிலுக்கு பொரி படைக்கிறார்கள்.

34.ஸ்ரீ செந்தில் ஆண்டவனை தரிசிக்கச் செல்லும் ஆண் பக்தர்கள் அனைவரும் மேலாடை இல்லாமல் கோயிலுக்குள் செல்ல வேண்டும் என்பது மரபு. இங்குள்ள அர்ச்சகர்கள் 'திரிசுதந்திரர்கள்' எனப்படுவர். இவர்கள் கேரள தேச ஆசாரப்படி பூஜிக்கிறார்கள்.

35. தவத்திரு ஆறுமுக சுவாமிகள், தவத்திரு மௌன சுவாமிகள், தவத்திரு காசி சுவாமிகள் ஆகியோர் இந்த ஆலயத்துக்குத் திருப்பணி செய்துள் ளனர். கோயிலுக்கு தெற்கில் (சஷ்டி மேட்டுத் திடலுக்கு அருகில்) இவர்களது ஜீவ சமாதிகள் உள்ளன. வள்ளி சந்நிதிக்கு வலப்புறம் உள்ள தூண்களில் இவர்களின் சிலைகளைக் காணலாம். இவை மூலஸ்தானத்தை நோக்கியவாறு உள்ளன.

36. செந்தூரில் முருகப்பெருமான் முதலில் தங்கிய இடம் சிங்க கொழுந்தீசர் என்ற சிவன் கோயில். இந்தக் கோயிலில் உற்சவங்கள் கிடையாது. முருகன் தந்தையைப் பார்ப்பதற்காக இங்கு எழுந்தருள்கிறார்.

37. கி.பி. 1670ஆம் ஆண்டில் காயாமொழி பகுதியை அரசாண்ட பஞ்சாதித்தன் என்ற அரசன் செந்திலாண்டவனுக்கு தேர் செய்து அர்ப்பணித்துள்ளான்.

38.'இங்கிருந்து நீவிர் அருள்பாலிக்கும் வரை கடலால் கோயிலுக்குத் தீங்கு நேராது!' என்பது வருண பகவானின் சத்திய வாக்கு. சுனாமி தமிழ்நாட்டைத் தாக்கியபோது திருச்செந்தூருக்கு எந்த அபாயமும் ஏற்படவில்லை என்பதே இதற்குச் சான்று.

39. பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் அதி காரி ஒருவர் 59 காசுகளுள்ள தங்கக் காசு மாலையை முருகனுக்கு அளித்துள்ளார். தவிர, 100 அமெரிக்கன் டாலர்களால் செய்யப்பெற்ற காசு மாலையும் இங்கு உள்ளது. சிறப்பு நாட்களில் மட்டுமே இந்த ஆபரணங்களை முருகனுக்கு அணிவிக்கிறார்கள்.

40. ஸ்ரீசண்முகரின் உயரத்துக்கு ஏற்ற வைர வேல் ஒன்று இங்குள்ளது. இது

100 பவுன் தங்கம், 40 காரட் வைரம் ஆகியவற்றால் செய்யப்பட்டது. நடுவில் பெரிய பச்சைக் கல் கொண்டது. கி.பி.1917ல் கொத்தமங்கல் சி. ராம்ஜி குடும்பத்தாரால் அர்ப்பணிக்கப்பட்டது.

41. திருச்செந்தூர் முருகன் கோயிலில் தங்கத்தால் ஆன அரிய பொருட்கள் உள்ளன. இறைவனுக்கு அமுது படைக்கும்போது கீழே விழும் பருக்கைகளை எடுக்க தங்க ஊசி ஒன்று பயன்படுத்தப் படுகிறது. கும்பாபிஷேகத்தின் போது குடத்துக்குள் இடப்படும் பொருட்களுள் தங்க மீன்களும், தங்கத் தாமரைப் பூக்களும் இடம்பெறுகின்றன. பூஜை முடிந்ததும் தங்கச் சாமரம் கொண்டு கவரி வீசுவர். மாசித் திருவிழாவின் 8ஆம் நாளன்று ஸ்ரீசண்முகருக்கு அபிஷேகிக்கும்போது தங்கப் பிடியுடன் கூடிய காண்டாமிருகக் கொம்பின் வழியாக நீர் ஊற்றுகிறார்கள். இவை தவிர தங்க ஆமை ஒன்றும், கும்பாபிஷேகத்தின்போது தலைமைப் பட்டர் அணிந்துகொள்ள நவரத்தின மோதிரங்களும் உள்ளன.

42.தீராத வயிற்றுவலி உடையவர்கள் திருச்செந்தூர் முருகன் சந்நிதியில் கந்தசஷ்டி கவசம் பாடினால் குணமாகும் என்று பால தேவராய சுவாமிகள் கூறியிருக்கிறார். சஷ்டி விரதம் ஆறு நாட்கள் அனுஷ்டிக்கப் படுகிறது. சஷ்டி விரத காலத்தில் திருச்செந்தூர் முருகன் சந்நிதானத்தில் அமர்ந்து விரதம் இருந்தால் நினைத்த காரியங்கள் நடக்கும்.

43.கடற்கரையில் சூரசம்ஹாரம் நிகழ்ச்சியின்போது கடல்நீர் உள் வாங்கும் அற்புதம் இன்றும் தொடர்கிறது. சூரசம்ஹாரம் முடிந்ததும் செந்திலாண்டவர் எதிரே கண்ணாடி வைத்து, கண் ணாடிக்கு அபிஷேகம் நடை பெறும். இதை 'சாயாபிஷேகம்' (சாயா நிழல்) என்பர்.

44.திருச்செந்தூர் முருகப்பெருமான் கோயிலில் பத்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு சித்திரை, வைகாசி, கார்த்திகை மாதங்களில் பால்குடம் எடுப்பது சிறப்பு.இதனால் குழந்தைகள் மற்றும் பெற்றோரது தோஷங்களும் நீங்கும் என்பது ஐதீகம்.

45.ஆவணித் திருவிழாவின் 7ஆம் நாளன்று தங்கப் பல்லக்கில் எழுந்தருளும் முருகப் பெருமான் முன் புறம் ஆறுமுகனின் தோற்றத்திலும், பின்புறம் நடராஜர் தோற்றத்திலும் காட்சியளிப்பார்.

46.விசாகப் பெருவிழா பத்து நாள் வெகு சிறப்பாக நடைபெறும். அப்போது கோயிலின் எதிரிலுள்ள வசந்த மண்டபத்தைச் சுற்றி நான்கு புறமும் அகழி போல் கட்டி அதில் நீர் நிரப்பி வைத்திருப்பர். விழாவின் முதல் நாள் உச்சிகால பூஜை முடிந்ததும் முருகப் பெருமான் மாலை வரை இந்த வசந்த மண்டபத்தில் எழுந்தருளியிருப்பார். இங்கு ஆராதனைகள் முடிந்ததும், சப்பரத்தில் ஏறி 11 தடவை வலம் வந்து, முருகன் கோயிலுக்குள் போவார்.

47. 137 அடி உயரமும், 9 நிலைகளையும் கொண்ட ராஜ கோபுரத்தைக் கட்டியவர் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த தேசிக மூர்த்தி சுவாமிகள். இவரை ஒடுக்கத்தம்பிரான் என்றும் கூறுவர். கோபுரம் கட்டும்போது பணியாளர்களுக்கு கூலியாக இலை விபூதி தருவார். தூண்டு கை விநாயகர் கோயிலருகில் சென்று இலையைப் பிரித்துப் பார்த்தால், அதில் வேலைக்குரிய கூலி இருக்குமாம்! ஒரு நாள் இந்த அதிசயம் நடப்பது நின்று போனது. தேசிக சுவாமிகள் முருகனிடம் முறையிட்டார். அவரது கனவில் தோன்றிய முருகன், ''காயல்பட்டினம் வள்ளல் சீதக்காதியிடம் சென்று உதவி பெற்று கோபுரத்தைக் கட்டி முடி!'' என்றார். சுவாமிகள் சீதக்காதியைச் சந்தித்தார். அவர் ஒரு மூட்டை உப்பு கொடுத்தார். அதைக் கோயிலுக்குக் கொண்டு வந்து பிரித்துப் பார்த்தபோது தங்கக் காசுகளாக மாறிவிட்டிருந்தன. கோபுர வேலை

இனிதே முடிந்தது. பால்குடம் எடுத்து வரும் பக்தர்கள் அடிக்கடி வழுக்கி விழுந்த சம்பவங்களாலும் கிழக்கு முகமாக சுப்பிர மணியர் சந்நிதிக்கு பின்புறம் அமைந்து விட்டதாலும் ராஜ கோபுர வாயில் மூடப்பட்டு விட்டதாம்.

48. ஆதிசங்கரர் வடநாட்டு திக்விஜயத்தை மேற் கொண்டபோது அவருக்கு எதிராக அபிநவகுப்தன் என்பவன் அபிசார யாகம் செய்து, ஆதிசங்கரருக்குக் காச நோயை உண்டாக்கினான். பிறகு ஈசனின் கட்டளைப்படி ஆகாய மார்க்கமாக திருச்செந்தூர் வந்து சேர்ந்தார் ஆதிசங்கரர். இங்கு ஆதிசேஷனான பாம்பு முருகனை பூஜிப்பது கண்டு வியப்படைந்தார். பாம்பொன்று ஊர்ந்து செல்லும் விதமான நடையில் சுப்பிரமணிய புஜங்க ஸ்லோகங்களை இயற்றி முருகன் அருளால் நோய் நீங்கப் பெற்றார். இங்கு மகா மண்டபத்தில் ஆதிசங்கரரது சிலை உள்ளது.

49.இலங்கை மன்னன் கண்டி அரசன் கனவில் திருச்செந்தூர் முருகன் தோன்றி, சந்தன மரம் ஒன்றை வெட்டிக் கடலில் மிதக்க விடச் சொன்னார். மன்னன் வெட்டித் தள்ளிய மரம் திருச்செந்தூர்க் கரையை அடைந்தது. இந்த மரமே கொடிமரமாக உள்ளது. இந்தச் செய்தி திருச்செந்தூர் பிள்ளைத் தமிழிலும் இடம் பெற்றுள்ளது.

50.திருச்செந்தூர் கோயில் மடைப் பள்ளியில் வேலை பார்த்தவன் வென்றிமாலை. முருக பக்தன். ஒரு நாள் பிரசாதம் தயாரிக்காமல் தியானத்தில் ஆழ்ந்தான். உச்சிக்கால பூஜைக்கு பிரசாதம் இல்லை என்றதும் வென்றிமாலை வெளியேற்றப்பட்டான்! அவமானம் தாங்காமல் கடலில் விழப் போனான். அப்போது அவனைத் தடுத்து நிறுத்திய ஓர்



அசரீரி, 'செவலூர் சாஸ்திரிகளை போய்ப் பார்!' என்றது. அப்படியே செய்தான். அவனிடம், ''சம்ஸ்கிருதத்தில் உள்ள தலபுராணத்தை தமிழில் உனக்குச் சொல்லித் தர முருகன் கட்டளையிட்டிருக்கிறார்!'' என்றார் சாஸ்திரியார்.

பிறகு சாஸ்திரியார் சொல்லச் சொல்ல, செந்தூர் தல புராணத்தை மொத்தம் 899 தமிழ்ப் பாடல்களாக புனைந்தார் வென்றிமாலை. வென்றிமாலைக்கு கவிராயர் பட்டம் தந்தார் சாஸ்திரியார். திருச்செந்தூரில் அவற்றை அரங்கேற்ற வந்தபோது மீண்டும் விரட்டியடிக்கப்பட்டார் வென்றிமாலை. எழுதிய ஏடுகளை கடலில் வீசியெறிந்தார் கவிராயர். ஈழக் கடற்கரையில் கரை ஒதுங்கிய ஏடு ஒரு முருக பக்தரிடம் சிக்கியது. திருச்செந்தூர் தல புராணத்தின் புகழ் பரவியது. எப்படியோ, மூலப் பிரதி திருச்செந்தூருக்கு வந்து சேர்ந்தது. இன்றும் கோயிலில் அது பாதுகாக்கப்படுகிறது.

# கொலஸ்ட்ராலை குறைக்கும் ஓட்ஸ், பாதாம்!




உடல் பருமன் ஆவதற்கு ஒரு முக்கிய காரணம் கொலஸ்ட்ரால். கொலஸ்டிரால் என்பது ஈரலில் உற்பத்தியாகும் ஒரு மெழுகு போன்ற பொருள். இது சில வகை உணவுகளிலும் காணப்படுகிறது. இது வைட்டமீன் - டீ மற்றும் சில ஹார்மோன்கள், செல்லின் சுவர் மற்றும் பித்த உப்புகள் உற்பத்திக்கு தேவைப்படுகிறது

ஓட்ஸ், பாதாம் உள்ளிட்ட பருப்பு வகைகள் உடலில் உள்ள அதிகப்படியான கொலஸ்ட்ராலை குறைக்கும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். பாதாம் போன்ற பருப்பு வகைகள் சாப்பிட்டால் உடல் எடை கூடும் என்பதால், பெரும்பாலும் இத்தகைய உணவு வகைகளை பலரும் தவிர்க்கின்றனர். அதற்கு மாறாக இவற்றை சாப்பிட்டால் உடலில் உள்ள அதிகப்படியான கொலஸ்ட்ரால் கரையும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். கனடா, டொரான்டோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் ஜோன் செபேட் தலைமையில் இதுகுறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வு முடிவு குறித்து ஜோன் செபேட் கூறியதாவது: பொதுவாக உடல் எடையை குறைக்க பாதாம், பிஸ்தா ஆகியவற்றை தவிர்க்குமாறு கூறப்படுகிறது. உடல் ஆரோக்கியத்துக்கு நார்ச்சத்து அவசியம். இவற்றையும் தேவைக்கேற்ப உணவில் சேர்ப்பதில்லை. முறையான அறிவுரையின்றி மேற்கொள்ளப்படும் உடல் பருமன் குறைப்பு நடவடிக்கைகள் பயனற்றதாகவே இருக்கும். மாறாக இதனால் உடல் பருமன் அதிகமாகும் ஆபத்தும் உண்டு. சமீபத்திய எங்கள் ஆய்வில் ஓட்ஸ், நட்ஸ் அதிகம் எடுத்துக் கொள்வதால் உடலில் கொலஸ்ட்ரால் அளவு கட்டுப்படுத்தப்படுவது தெரிய வந்துள்ளது.

அதிகளவு நார்ச்சத்து உள்ள உணவுகளும் உடலுக்கு அவசியம். சோயா உணவு வகைகளான சோயா பால், டோஃபு ஆகியவற்றை அதிகம் எடுத்துக் கொள்ளலாம். பச்சை பட்டாணி, லென்டில்ஸ் உள்ளிட்ட பயிறு வகைகளை அதிகம் சேர்த்து கொள்ள வேண்டும். ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு இத்தகைய உணவுகளை தொடர்ந்து 6 மாதங்கள் கொடுத்து கண்காணித்ததில் அவர்களது உடலில் கொலஸ்ட்ரால் அளவு 13 சதவீதம் குறைந்திருந்தது.

ரத்தத்தில் உள்ள எல்டிஎல் கொலஸ்ட்ரால் என்ற உடலுக்கு தீங்கு விளைவிக்கும் கொழுப்பை எளிதாக கரைக்கும். தொடர்ந்து இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்ட 11 சதவீதம் பேர் இதய நோயில் இருந்து மீண்டு தற்போது ஆரோக்கியமாக உள்ளனர். இவர்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாக இதய நோய் பாதிப்பால் அவதிப்பட்டவர்கள். உடற்பயிற்சியும் உணவுக் கட்டுப்பாடும் மட்டுமே உடல் பருமனுக்கு தீர்வாகாது. சரியான உணவு முறையை தேர்ந்தெடுப்பது மிகமிக அவசியம். இவ்வாறு ஜோன் செபேட் கூறியுள்ளார்.



# சுருக்கத்தைப் போக்கும் மாதுளை முத்து!

எல்லா சீசனிலும் கிடைக்கிற மாதுளம்பழத்தில் இருப்பது அத்தனையும் சத்து! கூந்தலை வளப்படுத்துவதுடன் அழகுக்கும் கை கொடுக்கும் மாதுளையின் மகத்துவத்தை பார்ப்போம்..

சிலருக்கு தலையில் புழுவெட்டு இருந்தால் முடி ஏராளமாக உதிரும். இதைச் சரி செய்யும் தன்மை மாதுளைக்கு உண்டு.

புளிப்பு ரக மாதுளம்பழத்திலிருந்து 3 டீஸ்பூன் சாறு எடுத்து, அதை தலை முழுவதும் எண்ணெய் தடவுவது போல பரவலாக தடவ வேண்டும்.

3 டீஸ்பூன் வெந்தயம், 2 டீஸ்பூன் துவரம் பருப்பு இரண்டையும் முந்தைய நாள் இரவே வெந்நீரில் ஊறவைத்து, மறுநாள் அரைத்துக் கொள்ள வேண்டும். இந்த விழுதை வைத்து தலையை அலச வேண்டும்.

இப்படி தொடர்ந்து 10 நாட்கள் குளித்து வந்தால், முடி உதிர்வது நின்று வளர ஆரம்பிக்கும்.

வியர்வையால் உடல் துர்நாற்றம் வீசுகிறதா? மாதுளம்பழத்தின் தோல் பகுதியை நன்றாகக் காய வைத்து பவுடராக்க வேண்டும். இதனுடன் பயத்தம்பருப்பு பவுடரை சம அளவு கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். தினமும் குளித்த பிறகு, உடலில் இந்த பவுடரை பூசி கழுவ வேண்டும். துர்நாற்றம் நீங்குவதுடன் உடலும் குளிர்ச்சியாகி விடும்.

ஒரு டீஸ்பூன் மாதுளை ஜூஸ், அரை டீஸ்பூன் சந்தனம் இரண்டையும் கலந்து முகத்தில் பூசி, 10 நிமிடம் கழித்து கழுவினால் முகத்தில் பளபளப்பு கூடும்.

லருக்கு திறக்கவே முடியாத அளவுக்கு கண் பொங்கிவிடும்.. இமைகளும் உதிர்ந்து விடும். இதற்கு ஒரு மாதுளம்பழத்தை நான்காக வெட்டி, அதில் ஒரு துண்டை தண்ணீரில் போட்டு கொதிக்க விட்டு, ஆற வைத்துக் கிடைக்கிற தண்ணீரால் கண்களை கழுவினால், கண் பொங்குவது உடனே நிற்கும்.

ஒரு டீஸ்பூன் இந்த பவுடருடன் ஒரு டீஸ்பூன் பயத்த மாவு, அரை டீஸ்பூன் எலுமிச்சைச் சாறு சேர்த்து கலக்க வேண்டும். குளிப்பதற்கு முன் இதை முகத்தில் பூசி, காய்ந்த பிறகு கழுவ வேண்டும். வாரம் இரண்டு அல்லது மூன்று முறை இப்படி செய்து வந்தால், பருக்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்.

தமிழர் தகவல் வாசகர்களுக்கு
தவிர்க்க இயலாத
காரணங்களால் இந்த இதழ்
தாமதமாக வெளியாகிறது.
வாசகர்கள் மனம்
பொறுத்தருள வேண்டுகிறோம்.


## மகிழ்ச்சி அளிக்கும்

## ஆனந்தமான பயணம்

தமிழ் நாட்டுக்கு வரும்போது

சிறந்த வாகன சேவையை உங்களுக்கு

தருவதற்கு ஆயத்தமாக உள்ளோம்.

தொடர்புக்கு :

**செல்வா**

தொலைபேசி எண்:

**97880 59977 / 9444 175825**

# இலங்கை நீர்கொழும்பு வயோதிபர் இல்லத்திற்கு நிதி சேர்த்தல்

ஆதரவற்ற, கைவிடப்பட்ட வயோதிபர்களைப் பராமரிப்பதற்கு இல 100 கடற்கரை தெரு, நீர் கொழும்பு இலங்கையில் இலவச வயோதிபர் பராமரிப்பு இல்லம் ஒன்றை அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியாஸ்திரிகள் சபை ஆரம்பிக்க உள்ளது. இதற்கு இலங்கை ரூ 40 மல்லியன் தேவைப்படுகிறது. ஆரம்பத்தில் 60 முதியோர்கள், அதன் பின்பு அதிகரிக்க உள்ளோம்.

இச்சபை, இல 201/1 மகாவத்தை கொழும்பு 14இல் கடந்த 40 வருடங்களாக "அன்பு இல்லம்" என்ற பெயரில் இலவச வயோதிபர் இல்லம் ஒன்றை நாடாத்தி வருகிறது. இங்கே தற்பொழுது பல இன. மதங்களைச் சேர்ந்த ஆண், பெண் முதியோர் 60 பேர் பராமரிக்கப்படுகின்றனர். கடவுளின் கிருபையால் கருணை உள்ளம் படைத்தோர் நன்கொடையில் இவர்களின் லௌகீக, ஆத்மீக தேவைகளை சிறப்பாக கவனித்து வருகிறோம்.

நீர்கொழும்பில் புதிய வயோதிபர் இல்லம் ஒன்றை ஆரம்பிப்பதன் நோக்கம் இங்கே ஆதரவின்றி கைவிடப்பட்டு கஷ்டப்படும் வயோதிபர்கள் பலர் உள்ளனர். இவர்கள் மீது அனுதாபம் கொண்டு உதவ விரும்புவோர், கீழே ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ள வங்கி கணக்கிற்கு தங்கள் நன்கொடைகளை அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியாஸ்திரிகள் சபை கடந்த 90 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் சேவையாற்றி வருகிறது. அதன் தலைமையின் வழிகாட்டலில் தற்பொழுது 41 கன்னியாஸ்திரி மடங்கள், 23 பாடசாலைகள், 20 இளைஞர் இல்லங்கள் இன்னும் பாலர்கள், முதியோர்கள் இல்லங்களையும் நடத்தி வருகிறது. மக்கள் சேவையே அதன் இலட்சியம், மேலதிக விபரம் வேண்டுவோர் கீழே ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ள கன்னியாஸ்திரிகளைத் தொடர்பு கொள்ளவும்.



# Request for Funds to Elders Home in Negombo, Sri Lanks

Apoatobic Carmel Sisters in Sri Lanka are about to start a Charitable Elders House at No. 100, Sea Street, Negombo, Sri Lanka for the benefits of deserted and destitute elders. This is our Second Project costing SL. Rs. 40 Million to accommodate 60 Elders at the start and to increase the number later.

Our First Project for Elders, under the name "Home of Compassion" has been functioning at No. 201/1, Mahawatta, Colombo 14 for the last 40 years. Presently there are 60 Elders, both males and females of all casts races and religions. With the Grace of God and with well wishers `supports and public donations, we run this Home and look after the elders' physical and spiritual needs to the best of our abilities.



Negombo is selected for our Second Project where several elders suffer without any care and attention. Those who sympathise with them and wish to help them are kindly requested to send their contributions to the Credit of Account No. 107320117170 at the MUTUWAL Branch of NATIONAL SAVINGS BANK, Sri Lanka operated in the name of HOME OF COMPASSION, No. 201/1, Mahawatta, Colombo, 14, Sri Lanka.

The Congregation of Apostolic Carmel Sisters counting over 90 years of service in Sri Lanka presently run 41 convents, 23 schools, 20 children homes and homes for babies and elders in all parts of Sri Lanka under the guidance of Provincial Superior. Our Mission is to serve humanity.

Contributors can contact the following to get more details, if required:

(1) **Rev. Sister Rubika AC,**

Provincial Superior

Tel. : +94714524855

maryrubika@gmail.com

(2) **Rev. Sister Gnanadarshini AC,**

Bursar,

Tel. : +94772792848

Marygnana@gmail.com

(3) **Rev. Sister Mena,**

Superior Elders Home

Tel. : +94112522893

(4) **THE APOSTOLIC CARMEL**

Tel: +94112695045

acphsrilanka@gmail.com



## ஓரேநாளில் நவராத்திரி

லண்டனில் ஓரே நாளில் நவராத்திரி விரதம் சைவ கோவில்களில் நடைபெற்றது. இந்தக் கணிப்பு வாக்கியபஞ்சாங்க கணிப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

# இது பாரதியின் பாப்பா அல்ல

ஓரமா விளையாடு பாப்பா - நீ
ஒத்தையாய் விளையாடு பாப்பா
வீட்டுக்குள்ளே விளையாடு பாப்பா - நீ
வெளியே வரக்கூடாது பாப்பா!

காலை எழுந்தவுடன் ஸ்கூலு - பின்பு
கண்ணைக்கட்டும் கம்யூட்டர்
மாலை முழுவதும் டியூசன் என்று - நீ
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா!

எல்லா விளையாட்டும் நீ
இங்கு விளையாடனும் பாப்பா - அதை
மொபைல்ல மட்டும்
விளையாடனும் பாப்பா! - அதை
விளையாடனும் பாப்பா!

பணத்தை மட்டும் சம்பாதிக்கணும் - அதை
நீ மட்டும் வைச்சுக்கணும் பாப்பா
அன்பு எல்லாம் எதுக்கடி பாப்பா - நீ
ஆதாயம் வருதானு பாரு பாப்பா!

பாதகம் நடந்தா பதுங்கிவிடு பாப்பா
மோதகம் தந்தா புகழ்ந்துவிடு - நீ
உலகமே உனக்கு மட்டும் என
உணர்ந்து வாழ்ந்து விடு பாப்பா!

நன்றி: தமிழ் முரசு

அ.முத்துலிங்கம்



# முதல் ஆச்சரியம்

**ஆ**ப்பிரிக்காவில் எனக்கு ஏற்பட்ட முதல் ஆச்சரியத்தைப் பற்றி சொல்லலாம் என நினைக்கிறேன். இத்தனை வருடங்கள் கழிந்த பின்னரும் அது நினைவிலிருந்து மறைய மறுக்கிறது. சமீபத்தில் அந்த நினைவு வந்தபோது ஏன் இதை எழுதவில்லை என்று யோசித்தேன். ஒருவரும் நம்பமாட்டார்கள் என்பதால் எழுதாமல் விட்டேனோ தெரியவில்லை. அல்லது 2013ம் ஆண்டு பிறந்த பின்னர் எழுதும் முதல் எழுத்தாக இது இருக்கவேண்டும் என்று விதி தீர்மானித்ததால் இருக்கலாம். என்னவோ, இப்போது சொல்லலாம் என்று தோன்றுகிறது.

நான் அங்கே சென்ற வருடத்துக்கு சில வருடங்களுக்கு முன்னர்தான் சியரா லியோன் என்ற ஆப்பிரிக்க நாடு பிரிட்டிஷ்காரர்களிடமிருந்து சுதந்திரம் பெற்றிருந்தது. ஆனாலும் எல்லாமே அங்கே ஆங்கிலமயம்தான். ஆங்கிலப் பவுண்டு அங்கே பணமாக இருந்தது. அவர்கள் புதிதாக லியோன் என்ற காசை உருவாக்கியிருந்தார்கள். இரண்டு லியோன் ஒரு பவுண்டு. இந்த லியோனை எடுத்துப்போய் இங்கிலாந்தில் பொருள்கள் வாங்கலாம். ஆங்கிலப் பவுண்டை சியரா லியோனில் பயன்படுத்தலாம். இங்கிலாந்தில் என்னென்ன பொருட்கள் இருந்தனவோ அவையெல்லாம் சியரா லியோனிலும் இருந்தன. சியரா லியோனின் மேல்தட்டு மக்கள் ஆங்கிலேயரைபோலவே பேசினார்கள், பழகினார்கள், உடையணிந்தார்கள். ஓரளவுக்கு மக்கள் சுபிட்சமான வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்றுதான் பட்டது. ஏழ்மை என்பதை வெளிப்படையாக காணமுடியவில்லை. நான் வசித்த கிராமத்தில் மாலையானதும் கேளிக்கையும் பாட்டும் கூத்தும்தான்.

நான் சிலோனை விட்டபோது அங்கே பொற்காலம் என்று கூறலாம் ரூ அரசியல்வாதிகளுக்கு. இறக்குமதி இல்லை. ஏற்றுமதி குறைந்துவிட்டது. அத்தியாவசியமான பொருட்களுக்கு தட்டுப்பாடு. காலையில் பாண் வாங்குவதற்கு 5 மணிக்கு வரிசையில் போய் நிற்க வேண்டும். பால் என்றால் 4 மணி. வெங்காயம் என்றால் 3 மணிக்கு போனால்தான் சமாளிக்கமுடியும். எங்கள் குழந்தைக்கு பால் மா வாங்குவதற்கு நாங்கள் ஒரு மந்திரியை பிடிக்கவேண்டியிருந்தது. அப்படியான நாங்கள் ஆப்பிரிக்காவுக்கு



போய் அங்கேயிருந்த பொருள்களைப் பார்த்ததும் மயங்கிவிட்டதில் ஆச்சரியமில்லை. ஏதோ லண்டனில் இருப்பதுபோலவே இருந்தது. சிலோனில் அப்போதெல்லாம் டெலிவிசன் கிடையாது ஆனால் சியரா லியோனில் இருந்தது. சிலோனில் ஒஸ்டின் யு 30 காரும் மொரிஸ் மைனரும்தான். ஆப்பிரிக்கவில் பென்ஸ் கார்கள் தாராளமாக ஓடின.

மனைவி சிலோனுக்கு ஒரு பார்சல் அனுப்பலாம் என்றார். நான் கொஞ்சம் யோசித்திருக்க வேண்டும். உடனேயே சரி என்றேன். சிலோனில் கிடைக்காத சில பொருட்களை வாங்கி பார்சல் பண்ணிக்கொண்டு அந்தக் கிராமத்தில் இருந்த ஒரேயொரு அஞ்சலகத்துக்கு போனேன். அப்போது அஞ்சலகம் என்ற பெயர்கூடக் கிடையாது. தபால் கந்தோர்தான். ஒரு சின்ன அறை. நீளமான கம்பிகளால் அதை அடைத்திருந்தார்கள். முதல் பார்வைக்கு அது சிறைபோலவே தோற்றமளித்தது. ஒரு மலிவான மேசை மற்றும் நாற்காலி. மேசையிலே சின்னச்சின்ன உடமைகள். நான் போனபோது 50 ~ 55 வயது மதிக்கக்கூடிய ஒருவர் நின்றுகொண்டிருந்தார். அவர்தான் போஸ்ட் மாஸ்டர், கிளார்க், தபால்காரர் என்பதை ஊகிப்பது அவ்வளவு கடினமானதில்லை. சுருட்டை தலை முடியை ஒட்ட வெட்டியிருந்தார். குதிரைக்கு இருப்பதுபோல சற்று மேலே மடிந்த உதடு. தொளதொளவென்ற நீண்ட ஆடையும் கீழே கால்சட்டையும் அணிந்திருந்தார். கால் சட்டை காலிலும் பார்க்க நீளமாக இருந்ததால் மிச்சத் துணி சுருண்டுபோய் காலடியில் கிடந்தது.

நான் அவர்கள் மொழியில் வணக்கம் சொன்னேன். ஆப்பிரிக்க வணக்க முறை நீண்டு நீண்டு போகும். அவற்றை மனனம் செய்திருந்தேன். அவரும் சொல்ல நானும் சொன்னேன். ஐந்து நிமிடம் ஆனது. உள்ளே ஒரு நாய் படுத்திருந்தது. அதற்கு மேல் ஒரு குழந்தை படுத்து உறங்கியது. நாயும் உறங்கியது. உறங்காமல் காட்சியளித்தது

அவர் ஒருவர்தான். வாயிலே கோலாநட்டை சப்பியபடி நின்றார். சும்மா கிடந்த நாற்காலியில் உட்காரலாம் என்ற யோசனை அவருக்கு இன்னும் தோன்றவில்லை.

அவரைப் பற்றி நான் வேலை செய்யும் அலுவலகத்தில் ஏற்கனவே கேள்விப்பட்டிருந்தேன். அவர் அந்தக் கிராமத்து பணக்காரர். 6 பெண்களைப் பெற்று அவர்களை நல்ல விலைக்கு விற்றிருந்தார். 100 ஆடுகளும் 50க்கு மேலே மாடுகளும் அவரிடம் இருந்தன. அவரைப் பார்க்க இவருடைய மாப்பிள்ளைகள் சிலவேளைகளில் வருவதுண்டு. 'நீ எந்த மகளை மணமுடித்தாய்?' அவர் கேட்பார். 'நாலாவது மகள்?' 'எத்தனை ஆடுகள் கொடுத்தாய்?' அவன் சொல்வான். அதற்குப் பின்னர்தான் அவனுடைய தகுதியை தீர்மானித்து அதற்கு ஏற்றபடி உபசாரம் செய்வார். தபால் கந்தோர் வேலை ஒரு பொழுதுபோக்குப் போலத்தான். ஒருநாளைக்கு என்னைப்போல ஒன்றிரண்டு பேர் வருவார்கள். ஆகவே என்னை அவசரமாக முடித்து அனுப்பிவிட்டு அடுத்தவரைப் கவனிக்கவேண்டும் என்ற கவலை கிடையாது.

என்ன என்பதுபோல முகத்தினால் கேட்டார். நான் பார்சலைத் தூக்கிக் காட்டினேன். 'எங்கே அனுப்பவேண்டும்?' என்றார். சிலோன் என்று பதில் கூறினேன். அவர் நம்பாமல் இன்னொருமுறை கேட்டார். மறுபடியும் சிலோன் என்றேன். ஒரு புத்தகத்தை எடுத்து அதில் பல பக்கங்களை இடமிருந்து வலமாகவும் பின்னர் வலமிருந்து இடமாகவும் தட்டிப் பார்த்துவிட்டு இல்லை என்று பிரகடனம் செய்தார். நான் கம்பிகள் வழியாக புத்தகத்தை வாங்கி தேடிப் பார்த்து சிலோன் என்று சின்ன எழுத்தில் எழுதியிருந்ததை கண்டுபிடித்துக் காட்டினேன். மேலும் என்னுடன் வாதம் செய்ய விரும்பாமல் அப்படி ஒரு நாடு இருக்கிறது என்பதை ஒத்துக்கொண்டார்.

பார்சலைக் கேட்டார். அது கம்பிகளுக்குள்ளால் போகத் தயாராகவில்லை. கதவைத் திறந்து வெளியே வந்து பெற்றுக்கொண்டார். தராசுபோல தோன்றிய ஒன்றில் அதை நிறுத்தார். ஏதோ எல்லாம் வித்தைகள் செய்து அதன் எடையை குறித்துக்கொண்டார். பின்னர் நீளமான ஒரு புத்தகத்தை எடுத்து ஆராய்ந்து பலவிதமான கணக்குகளை எழுதி விடையை கண்டுபிடித்துவிட்டு என்னை நிமிர்ந்து பார்த்தார். என் வயிற்றின் உள்ளே குடல் இருப்பது ஞாபகத்துக்கு வந்தது. என் நெஞ்சு படபடப்பு அதிகமாகியது. '40 லியோன்' என்று வாய்கூசாமல் சொன்னார். நான் 'என்ன?' என்று கத்தினேன். நாய் திடீரென்று விழித்து கழுத்தை உயர்த்த குழந்தை உருண்டு கீழே விழுந்தது. பாம்பு தலையை தூக்கிப் பார்ப்பதுபோல ஒரு கணம் பார்த்த பின்னர் நித்திரையை தொடர்ந்தது.

40 லியோன் என்றால் அது 20 பிரிட்டிஷ் பவுண்டு. புராண கால அரிச்சந்திரன் செய்ததுபோல மனைவியையும் குழந்தையையும் விற்றாலும் அந்தக் காசு தேறாது. நான் 'இந்தப் பார்சல் உள்ளே இருக்கும் சாமான்களின் விலை 5 லியோன்தான்' என்றேன் பரிதாபமாக. அதுதான் முதல் சிக்கல். உடனேயே ஏன் அப்படிச் சொன்னேன் என்று வருத்தப்பட வேண்டியிருந்தது. 'பார்சல் உள்ளே என்ன இருக்கிறது?' என்று கேட்டார். நான் ஒவ்வொன்றாகச் சொன்னேன். அதைச் சொல்லும்போது வெட்கம் என்னைத் தின்றது. அந்த மனிதரின் முகபாவனையில் அவர் மனதில் ஓடுவது அப்படியே தெரிந்தது. இதையெல்லாமுமா ஒரு மனிதர் சிலோனுக்கு, அதுவும் புத்தகத்தில் பெயர் இல்லாத ஒரு நாட்டுக்கு, அனுப்புவார். உண்மையில் நான் அனுப்ப நினைத்த பொருள்கள் அப்படி அத்தியாவசியமானவை அல்ல. சொல்லப்போனால் மனிதகுலம் அவை இல்லாமலே சுபிட்சமாக வாழமுடியும். 'ஊதுகுழல், டொனால்ட் டக்,

பேசும் பொம்மை.’ ’அது என்ன பேசும் பொம்மை? அதை ஏன் அனுப்புகிறீர்கள்?’ என்றார். ‘நண்பரே, எங்கள் நாட்டில் ஜனநாயக ஆட்சி நடக்கிறது. அங்கே பொம்மைகள் பேசுவதற்கு அனுமதி உண்டு’ என்றேன்.

இந்த நேரம் பார்த்து என் அலுவலகத்தில் வேலை செய்யும் ஊழியர் ஒருத்தர் என்னைப் பார்த்துவிட்டு அவசரமாக ஓடி வந்தார். என்னிடம் ஒன்றுமே பேசாமல் அவர்கள் மொழியில் தபால் அதிகாரியிடம் ஏதோ சொன்னார். அவர் பதில் கூறினார். பிறகு இவர் ஏதோ சொல்ல அவரும் சொன்னார். இப்படியே போனது. நான் ஒருத்தன் அங்கே நிற்பது எல்லோருக்கும் மறந்துபோய்விட்டது. நான் இடைமறித்து ’என்ன பேசினீர்கள்?’ என்று நண்பரிடம் கேட்டேன். அவர் நான் பெரிய அதிகாரி என்றும் பார்த்துச் செய்யச் சொன்னதாகவும் தெரிவித்தார். அதற்கு அவர் என்ன பதில் சொன்னார் என்று கேட்டேன்.’அரசனாய் இருந்தாலும் வாந்தி எடுக்கும்போது குனியத்தானே வேண்டும்’ என்றார். ’சரி சரி. நீங்கள் போங்கள், நான் சமாளிக்கிறேன்’ என்று அவரை அனுப்பிவைத்தேன்.

அவர் போன பின்பு மீதி வாந்தியையும் எடுக்கத் தயாரானேன். ஆனால் அதிகாரி தொடர்ந்து ’தேதி என்ன?’ என்று கேட்டார், ஏதோ அதற்கும் நான்தான் பொறுப்பு என்பதுபோல. சொன்னேன். அவர் குத்தப் போகும் முத்திரையில் சரியான தேதி விழவேண்டும் அல்லவா?. நான் சொன்னதை அவர் நம்பவில்லை. நாள்காட்டியில் தாளைக் கிழித்தார். அது புதன்கிழமையானது. இன்னொரு தாளை கிழித்தார். அது வியாழன் ஆனது. அடுத்த தாளைக் கிழித்ததும் வெள்ளிக்கிழமை வந்தது. சரியான தேதிதான். மறுபடியும் விட்ட இடத்துக்கு திரும்பி ’40 லியோன்’ என்றார்.



’உங்கள் புத்தகத்தில் ஏதோ பிழை உள்ளது. இந்தச் சின்ன பார்சலுக்கு இத்தனை பெரிய காசு கட்டணமாக வராது’ என்றேன். ’இங்கே யார் அதிகாரி?’ குரல் உயர்ந்தது. வாய்க்குள் நுழைந்த பூச்சியை துப்புவதுபோல வார்த்தைகள் வெளியே வந்து விழுந்தன. பணிவான குரலை வரவழைத்துக்கொண்டு ‘இன்னொருமுறை சரிபார்த்தால் நல்லது’ என்றேன். பலநாள் பாடுபட்டு தயாரித்த, அவருக்கு மட்டுமே புரியும் புத்தகத்தை எடுத்து, தாளில் ஒரு நம்பரை எழுதிக் காட்டினார். ஒரு

சின்னத்தாளில் எழுதப்பட்டுவிட்டதால் அது சரியான கட்டணம். 'இவ்வளவு அதிகப்படியான கட்டணம் உலகில் வேறு எங்குமே கிடையாது' என்றேன். 'இதுதான் ஆகக் குறைந்த கட்டணம். கடல்மேல் பயணம் செய்து பார்சல் உங்கள் நாட்டுக்கு போகும். மேலும் குறைத்தால் கட்டாது. தபால்துறை நட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது' என்றார். 'நானும் நட்டத்தில்தான் ஓடிக்கொண்டிருக்கிறேன்' என்றேன். அவர் கவனிக்கவில்லை. ஒரு கொடுப்புக்குள் இருந்த கோலாநட்டை மற்றப்பக்கம் நாக்கால் தள்ளிக்கொண்டிருந்தார்.

'உங்கள் மேலதிகாரியோடு பேசலாமா?' கொக்களை கலைப்பதுபோல கைகளை வீசி என் வார்த்தைகளை கலைத்தார். 'நான்தான் மேலதிகாரி.' 'சரி, அந்த மேலதிகாரியின் மேலதிகாரியோடு பேசலாமா?' 'அதுவும் நான்தான்.' அப்பொழுதுதான் நான் உணர்ந்தேன், சியரா லியோன் தபால் துறையின் சர்வ வல்லமை பொருந்திய அதிபர் முன்னே நான் நின்றுகொண்டிருக்கிறேன் என்பதை. நான் பார்சலை எடுத்துக்கொண்டு வந்த வழியே திரும்பினேன். வீட்டிலே வீரமாகப்போய் பார்சல் அனுப்பமுடியாமல் போனதை சொல்ல முடியாது. ஆகவே பக்கத்து காட்டில் பார்சலை எறிந்துவிடுவது என்று முடிவு செய்தேன். யானையும் நரியும் ஊதுகுழலை ஊத, கொலபஸ் குரங்குகள் நடனமாடட்டும். எப்படியும் பார்சல் சிலோனுக்கு போய்ச் சேரப்போவதில்லை. மனைவியிடம் ஒரு சின்னப் பொய் சொன்னால் சரியாய் போச்சுது. என் நினைப்பை செயலாக்க முன்னர் ஓலமிட்டபடி என்னைத் துரத்திக்கொண்டு போஸ்ட் மாஸ்டர் ஓடிவந்தார். 'இதற்கெல்லாம் கோபித்துக்கொண்டு போகலாமா. வாருங்கள், வாருங்கள்' என்றார், ஏதோ கல்யாண வீட்டு விருந்துக்கு அழைப்பதுபோல. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஊதுகுழலுக்கும், டொனால்ட் டக்கிற்கும், பேசும் பொம்மைக்கும் ஏற்படவிருந்த அபகீர்த்தியிலிருந்து அவை இப்படித்தான் தப்பிக்கொண்டன.

சின்ன வார்த்தையாக இருந்தாலும் முழு வாயையும் திறந்துதான் போஸ்ட் மாஸ்டர் பேசுவார். அவர் வாயை பார்த்துக்கொண்டிருந்ததில் அவர் சொன்ன விசயத்தை கேட்க தவறிவிட்டேன். 'சரி. பார்சலுக்கு எவ்வளவு தருவீர்கள்?' என்றார். நான் திடுக்கிட்டுவிட்டேன். ஒரு தானத்தை சொன்னேன். அவர் ஒன்றைச் சொன்னார். நான் ஒன்றைச் சொன்னேன். பருந்து பெரிய வட்டம் போட்டு, சிறிய வட்டம் போட்டு, இன்னும் சின்ன வட்டம் போட்டு இறுதியில் ஒரு புள்ளியில் குவிவதுபோல படிப்படியாப் பேசி கடைசியில் பேரம் படிந்தது. இருவரும் சம்மதித்த பணத்தை ஜனாதிபதி சியாக்கா ஸ்டீவன்ஸ் படம் போட்ட 50 சத புது நாணயங்களாக கொடுத்தேன். எனக்கு முன்னால் சரியான தபால் தலைகளை பார்சலில் ஒட்டி முத்திரையால் குத்தினார். 'சரி போய் வாருங்கள்' என்று விடைகொடுத்தார். குழந்தை திடீரென்று எழும்பி உட்கார்ந்து என்னைப் பார்த்து சிரித்தது. நாயும் உடம்பை சிலிர்த்து எழுந்தது. எப்படியோ அவைகளுக்கு அன்றைய வியாபாரம் முடிவுக்கு வந்தது தெரிந்தது.

நான் வீட்டுக்கு வந்து பார்சலை அனுப்பிவிட்டேன் என்று மனைவியிடம் சொன்னேன். அது போய்ச் சேராது என்பது எனக்கு தெரியும். ஒரு மாதம் கழித்து பார்சல் சிலோனில் கிடைத்துவிட்டதாக கடிதம் வந்தது. நான் அடைந்த ஆச்சரியத்துக்கு அளவே இல்லை.

அதுதான் ஆப்பிரிக்காவில் ஏற்பட்ட முதல் ஆச்சரியம். ஆனால் அதற்கு பின்னர் ஏற்பட்ட ஆச்சரியங்களை எல்லாம் கணக்கில் எடுத்து யோசித்துப் பார்த்தபோது அந்த முதல் ஆச்சரியம் பெரிய விசயமில்லை என்றுதான் எனக்கு இப்போது படுகிறது. ■

நுணாவிலூர் **கா.விசயரத்தினம்**
[இலண்டன்]

# கலிங்கப் போரில் பேய்கள் சமைத்த கூழ்



**க**லிங்கத்துப் பரணி பல்சுவைப் பெட்டகம்: உயிர் ஓவியம்:

ஆடிக்கொரு கூழ்: பரணிக்கோர் ஒரே கூழ்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டுவரை தமிழ் மொழியில் தனிச் சிறப்புற்ற இலக்கியமாகத் திகழ்ந்தது சங்க இலக்கியமாகும். இதையடுத்துப் பத்தாம் நூற்றாண்டுவரை வாழ்ந்தது சமய இலக்கியமாகும். அதன் பின்னர் பல வகைச் சிறிய நூல்கள் எழுந்தன. அவற்றைப் பிரபந்தங்கள் என்று அழைத்தனர். இப் பிரபந்த இலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும். அவற்றுள்

'பரணி' என்பது ஒன்று. களிறு ஒன்றினைக் களத்தில் எறிந்து பெயர்வோனே மிக்க வீரன் ஆவான். ஆயிரம் களிறுகளைப் போர்க்களத்தில் வென்ற மாவீரனின் வீரத்தினைச் சிறப்பித்துப் பாடிய நூலே பரணியாகும். இதனை இலக்கண விளக்க ஆசிரியர் பின்வருமாறு கூறியுள்ளார்.

'ஆனை ஆயிரம் அமரிடை வென்ற

மானவனுக்கு வகுப்பது பரணி.'

## கலிங்கத்துப் பரணி

தமிழிற் பரணிகள் பல உள. ஆயினும் முதற் குலோத்துங்க சோழனுடைய (கி.பி. 10701120) அவைக்களப் புலவராகத் திகழ்ந்த சயங்கொண்டார் (கி.பி.10701118) பாடிய கலிங்கத்துப் பரணியே எல்லாவற்றிலும் தலை சிறந்து விளங்குகின்றது. பரணி பாடுவதிற் கை தேர்ந்த ஒட்டக்கூத்தர் கலிங்கத்துப் பரணியை 'தென் தமிழ்த் தெய்வப் பரணி' எனச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

சோழ மன்னனாகிய முதற் குலோத்துங்கனுக்கும் கலிங்கத்து மன்னனாகிய அநந்தபதுமனுக்கும் இடையே நடந்த கலிங்கத்துப் போரில் சோழர் படை வெற்றியை எடுத்துக் கூறுவது கலிங்கத்துப் பரணியாகும். கலிங்கத்துப் பரணியில் பாட்டுடைத் தலைவன் முதற் குலோத்துங்கன் ஆவான். சயங்கொண்டார் கலிங்கத்துப் பரணியைப் பாடுவதற்கு முதற் குலோத்துங்க சோழனுடைய தலைமைப் படைத்தலைவனான கருணாகரத் தொண்டைமான் எய்திய கலிங்க வெற்றியே காரணமாம்.

முதற் குலோத்துங்கன் சோழ நாட்டை ஆண்ட மன்னர்களுள் தலைசிறந்த பேரரசன் ஆவான். இவன் சாளுக்கியர் குலத்தவன்; கலை பல பயின்றவன், போர்ப் பயிற்சிகளிலும் மிக்க திறம் படைத்தவன். மதுராந்தி என்பவள் இவனது பட்டத்தரசியும் முதல் மனைவியும் ஆவாள். இவளுடன் தியாகவல்லி, ஏழிசை வல்லி என வேறு இரு மனைவியர்களும் இவனுக்கு இருந்தனர். மதுராந்திக்கு ஏழு மக்கள் இருந்தனர். இவனுடைய காலம் கி.பி. 1070 முதல் 1120 வரை ஆகும். ஐம்பது ஆண்டுகள் அரசாண்டான்.

கலிங்கத்துப் பரணியைக் கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடு பாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, இந்திர சாலம், இராச பாரம்பரியம், பேய் முறைப்பாடு, அவதாரம், காளிக்குக் கூளி கூறியது, போர் பாடியது, களம் பாடியது, கூழ் அடுதல்

எனப் பதினான்கு (14) பிரிவுகளாகப் பிரித்துப் பாடியுள்ளார். இதில் 599 செய்யுட்கள் அமைந்துள்ளன. கடவுள் வாழ்த்தில் உமாபதி, திருமால், நான்முகன், கதிரவன், விநாயகர், முருகன், நாமகள், கொற்றவை ஆகிய தெய்வங்களை முன்நிறுத்திப் பாடியுள்ளார்.

## கடை திறப்பு

கவிச்சக்கரவர்த்தியின் கற்பனைவளம் ஊறிச்சுரந்து இனிக்க வைத்துக் களிப்பூட்டும் பகுதி இது. போர்மேற் சென்ற படையினர் காலந்தாழ்த்தி வெற்றி வாகையோடு நாடு திரும்புகின்றனர். அவர்களை மக்கள் வியந்து பாராட்டுகின்றனர். ஆனால் படையினரின் மனைவியர் ஊடிச் சினந்து, வருவார் என்று கதவைத் திறந்தும், வரார் என்று கதவை மூடியும் இரவெல்லாம் இருந்தமையால் கதவின் குடுமி தேயலாயிற்று எனச் சுவைபடப் பாடியுள்ளார்.

'வருவார் கொழுநர்' எனத் திறந்தும்,

'வாரார் கொழுநர்' என அடைத்தும்,

திருகும் குடுமி விடியளவும்

தேயும் கபாடம் திறமினோ!' (69)

இனிமை உண்டாகும்படியாக, அழகிய மழலைச் சொற்களால் சில வடுகுச்சொற்களையும், சில தமிழ்ச் சொற்களையும் கலந்து தடுமாறிப் பேசும்

கன்னட நாட்டுப் பெண்களே! உங்கள் வாசலை நெருங்கி, அடைத்திருக்கும் கதவைத் திறவுங்கள்!

'மழலைத் திரு மொழியில் சில
வடு;கும் சில தமிழும்
குழறித் தரு கருநாடியர்!
குறுகிக் கடை திறமின்.' *(43)*



இவ்வண்ணம் இப் பகுதியில் 54 பாடல்கள் அமைந்துள்ளன.

## பேய்களைப் பாடியது

பேய்களைப் பாடியது என்னும் பகுதியில் காளி தேவியை விட்டகலாமல் அவ்வம்மைக்குக் குற்றேவல் புரியும் பேய்களின் உருவம், செயல் ஆகியவற்றைப் பாடியுள்ளார் புலவர். இப் பகுதி படிப்போருக்கு இன்பத்தைக் கொடுப்பதாய் அமைந்துள்ளது. பேய்களைப் பற்றிக் கூறுகையில் பனைகள் போன்ற காலும் கையும் உடையவள் என்றும், குகைகளின் வாயைவிடப் பெரிய வாய்கள் உடையவை என்றும், பசிக் கொடுமையால் விறகு, தடியான உடம்பென்றும், முதுகுகள் வற்றல்போல் காய்ந்தனவென்றும், உடல் முழுவதும் மயிர்கள் நீண்டு வளர்ந்திருந்தன என்றும், நொண்டிப் பேய், கை ஒடிந்த பேய், குருட்டுப் பேய், ஊமைப் பேய், செவிட்டுப் பேய், குட்டைப் பேய், கூன் பேய் என்றும் சயங்கொண்டார் பாட்டிசைத்துள்ளார்.

பேய் முறைப்பாடு என்னும் பகுதியில் பேய்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தமது பசியைத் தீர்க்குமாறு காளி தேவியிடம் வேண்டிய காலை, 'மிக்க விரைவில் கலிங்க நாட்டில் பெரும் போர் நிகழும். அதனால் நும் பசி தீரும்.!' என்று கூற, உடனே பேய்கள் பெருங்களிப்பெய்தின. அப்பொழுது, கலிங்க நாட்டிலிருந்து வந்த பேய் அங்கு நிகழும் போரினைத் தேவிக்குரைக்க அதைக் கேட்ட மற்றைய பேய்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் கூத்தாடின. சில பேய்கள் தங்கள் கையிலுள்ள பிள்ளைகள் நிலத்தில் விழுந்து விடும்வண்ணம் பெரிய துணங்கைக் கூத்தாடி மகிழ்ந்தன

'பிள்ளை வீழ வீழவும்
பெருந் துணங்கை கொட்டுமே,
வள்ளை பாடி, ஆடி, ஓடி
வா! ஏனா அழைக்குமே!.' *(310)*

களம் பாடியது என்னும் பகுதியில் களச் சிறப்பு கூறுகையில் 'பதினெட்டு ஆண்டுகள் தேவர் அசுரர் போர், பதினெட்டுத் திங்கள் நிகழ்ந்த இராமாயணப் போர், பதினெட்டு நாள் நடந்த மாபாரதப் போர் ஆகியவைதாம் இவ்வுலகில் சிறப்புப்

பெற்றுள்ளன.'

என்று எல்லோர் பேச்சும் நீங்கும்படி, கருணாகரன் கலிங்கரோடு புரிந்த போரானது, அவற்றிலும் சிறந்து விளங்குகிறது என்கின்றார் சயங்கொண்டார்.

'தேவாசுரம், ராமாயணம்
மா பாரதம், உள என்று
ஓவா உரை ஓயும்படி
உளது, அப் பெரு களமே!' *(473)*

பரணிக் கூழ்

போர்க்களத்தைப் பார்வையிட்ட காளி தேவி பேய்களிடம் 'இனி, நீங்கள் கூழ் சமைத்துப் பருகுங்கள்' எனக் கட்டளையிடப் பேய்கள் கூழ் சமைத்துக் குலோத்துங்கனை வாழ்த்தின. பேய்கள் கூழ் சமைத்த காட்சியைப் புலவர் நேரில் கண்டதுபோல் சிறப்புற எடுத்துக் காட்டுகின்றார்.

'குறு வடிவுடைய மோடீ! நீ;ண்ட வடிவுடைய கொழுப்பு மாலை அணிந்தவளே! இரத்த வெள்ளத்தில் மூழ்கி நீராடும் மூதேவியே! கூர் பற்கள் கொண்டவளே! நீலிக் கண்ணீர் வடிப்பவளே! ஆட்டை விழுங்குபவளே! நெற்கதிர் போன்ற வயிற்றை உடையவளே! எல்லாரும் கூழ் சமைக்க வாருங்கள்!' என்று அழைக்கின்றனர்.

'குறு மோடி! நெடு நிணமாலாய்!
குடர்கலதீ!
கூர் எயிறீ! நீலி!
மறி மாடி! குதிர் வயிறீ! கூழ்அட வாரீர்!
கூழ்அட
வாரீரே!' *(505)*

*(கலதி மூதேவி. முடி வயிறு)*

பேய்கள் யானைக் கொம்பால் பற்களை விளக்கி, அவற்றின் விலாவெலும்பால் நாக்கை வழித்து, கூரிய அம்புகளினால் நகங்களைக் களைந்து, யானை மத நீராகிய எண்ணெயைத் தலையிற் தேய்த்து, குருதி வெள்ளத்தில் நீராடி, கொழுப்பாகிய ஆடையை உடுத்திக் கொண்டு, அணி அணிந்து, பரணிக் கூழ் சமைக்கின்றன.

பெரிய உடலையுடைய மதயானைகளின் பிணங்களாகிய மலைகளின் மேலே, வலிய கழுகின் சிறகால் வேய்ந்த அழகிய பந்தரின் கீழே, சமையலறையை அமைக்கின்றனர். யானைகள் பொழிந்த மதநீரால் நிலத்தை மெழுகி, பொடியாய் உதிர்ந்த முத்துத்தூளால் கோலம் இட்டு, இறந்த யானைகளின் தலைகளை அடுப்புகளாக அமைத்தனர்.

இறந்துபட்ட யானைகளின் வயிற்றைப் பானையாகவும், வீரர்களின் மூளையையும், இறைச்சியையும் அப் பானையிலிட்டு, குதிரைகளின் இரத்தத்தை உலை நீராகவும், குதிரைப் பற்களை வெங்காயமாகவும், வீரர் நகங்களை உப்பாகவும், இறந்த வீரர்களின் கோபத்தை நெருப்பாகவும், ஈட்டி முதலிய ஆயுதங்களை அடுப்பு விறகாகவும், கலிங்க வீரர்களின் பற்களை அரிசியாக இடித்து மாவாகச் சேர்த்துக் கூழ் சமைத்த முறை பரணிக்குரிய ஒரு தனிச் சிறப்பாய் அமைந்துள்ளது.

பேய்கள் கூழைக் கிண்டிக் கிண்டி, கிளறி, கையால் தொட்டுப் பதமும், சுவையும்

பார்த்தனர். 'இக் கூழ் நாம் முன்பு மதுரை, மணலூர், சக்கரக்கோட்டம் முதலிய களங்களில் குடித்த கூழ்களைக் காட்டிலும் மிக நன்றாக இருக்கின்றது. ஆகவே, இதை அடுப்பிலிருந்து இறக்க அனைவரும் வாருங்கள்' என்று அழைத்தனர்.

'பற்றிப் பாரீர், இக் கூழின்
பதமும் சுவையும், பண்டு உண்ட
மற்றைக் கூழின் மிக நன்று,
வாரீர் இழிச்ச வாரீரே.' *(552)*

(இழிச்ச இறக்க)

இறந்து சோர்ந்து கிடக்கும் யானைகளின் வால்களை விளக்குமாறாகப் பாவித்து நிலத்தைப் பெருக்கி, அலைகள் போன்றிருக்கும் செந்நீராகிய தண்ணீரைத் தெளித்து, இறந்த அரசர்களின்



கேடயங்களையும், மண்டையோடுகளையும் உண்கலங்களாகக் கொண்டு கூழை அருந்தத் தொடங்கின. மடைப் பேய்கள் கூழைப் பங்கிட்டனர். இறந்தவர்களின் தலைகளை அகப்பைகளாகவும், வேல்களை அவற்றின் காம்புகளாகவும் பாவித்துக் கூழை அள்ளி அள்ளி வார்த்தன.

## கூழ் பருகும் பேய்கள்

மடைப் பேய்கள், பார்ப்பனப் பேய்கள், சமணப் பேய்கள், புத்தப் பேய்கள், பார்வைப் பேய்கள், குருட்டுப் பேய்கள், ஊமைப் பேய்கள், கருவுற்ற பேய்கள், மூடப் பேய்கள், நோக்கப் பேய்கள் (ஒருவகைக் குலம்), கூத்திப் பேய்கள், விருந்துப் பேய்கள், ஊர்ப்பேய்கள், கனாக்காணும் பேய்கள், கணக்கப் பேய்கள் (சோதிடம் கூறும் பேய்) ஆகிய பல வகையான பேய்கள் கூழை உண்டன.

கூழில், ஆசை மிகுதியால், ஓட்டைப் பாத்திரத்தில் ஊற்றிய கூழானது வெளிப் பக்கம் ஒழுக, அப் பாத்திரத்தைத் திருப்பிப் பார்த்து முழுக் கூழையும் கவிழ்த்து விட்டுத் திகைத்து நிற்கும் மூடப் பேயை ஆசிரியர் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

'பொல்லா ஓட்டைக் கலத்துக் கூழ்
புறத்தே ஒழுக, மறித்துப் பார்த்து,
எல்லாம் கவிழ்த்துத, ;
திகைத்திருக்கும்
இழுதைப் பேய்க்கு வாரீரே.' (573)

(இழுதைப் பேய் அறிவற்ற மூடப் பேய்)

பிரமன் தனக்கு நான்கு வாய்களைப்

படைத்துக் கொண்டு, தமக்கு ஒரு வாயைப் படைத்தானே என்று பேய்கள் வெஞ்சினம் கொண்டன. நான்கு வாய்கள் இருந்தால் அதிகமான கூழைப் பருகலாமென்று நினைத்தன போலும்.

'தமக்கு ஒரு வாயொடு வாய் மூன்றும்
தாம் இனிதாப் படைத்துக் கொண்டு
நமக்கு ஒரு வாய் தந்த நான்முகனார்
நாணும்படி, களித்து உண்ணீரே!.' (581)

பேய் இனம்: பேய்களிலும் சாதி வேற்றுமை இருப்பதாக ஆசிரியர் கூறுகின்றார். பிராமணப் பேய்கள், சமணப் பேய்கள், புத்த மதப் பேய்கள், நோக்கப் பேய்கள் ஆகியனவும் அவற்றுள் காணப்படுகின்றன.

'உயிரைக் கொல்லாச் சமண் பேய்கள்
ஒரு போழ்து உண்ணும், அவை உண்ண,
மயிரைப் பார்த்து, நிணத் துகிலால்
வடித்துக் கூழை வாரீரே!.' (567)

சமணப் பேய்கள் பிறவுயிர்களைக் கொல்லாதவை. ஒரு நாளில் ஒரு வேளையே உண்பன. கூழில் மயிர் இருந்தால் ஒருவேளை உணவைத்தானும் உண்ணாது போகலாம். எனவே, அக்கூழைக் கொழுப்பாகிய சீலையில் வடித்துக் கொடுக்கும்படி சொல்லப்படுகின்றது. ஆசிரியர் பல உயிர்க் கொலையால் ஆக்கிய கூழைக் கொலை செய்யாத சமணப் பேய்க்கு ஊற்றச் சொல்வதில் நகைச்சுவை ததும்பி வழிதலைக் காண்கின்றோம்.

## தாம்பூலம் தரிக்கும் பேய்கள்

கூழ் குடித்து விட்டு வாய் கழுவிய பேய்கள் வெற்றிலை போடுகின்றன. போரில் இறந்த குதிரைகளின் காதுகளாகிய வெற்றிலையையும், அவற்றின் காற்பரடாகிய பாக்குத் துண்டுகளையும், இறந்த கலிங்க அரசரின் கண்ணின் மணியாகிய சுண்ணாம்பையும் சேர்த்து மடித்துத் தின்கின்றன.

'பண்ணும் இவுளிச் செவிச் சுருளும்
பரட்டின் பிளவும், படு கலிங்கர்
கண்ணின் மணியின் சுண்ணாம்பும்
கலந்து மடித்துத் தின்னீரே!' (584)

நாம் தற்பொழுது தாம்பூலம் போடும்பொழுது வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை ஆகிய நான்கினையும் சேர்த்துப் பாவிப்பது வழக்கமாகும். ஆனால், சயங்கொண்டார் காலத்தில் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகிய முப்பொருள்களையும் சேர்த்துத்தான் தாம்பூலமாகப் பாவித்துள்ளனர். புகையிலை போடும் பழக்கம் சயங்கொண்டார் காலத்தில் நடைமுறையில் இருக்கவில்லை. மேலும், 17ஆம் நூற்றாண்டில்தான் புகையிலையின் பாவனை ஆசிய நாடுகளுக்குப் பரவத் தொடங்கியது. இன்னும், புகையிலை போடும் பழக்கம் இடைக்காலத்திற்றான் புகுந்துள்ளமையும் புலனாகின்றது.

பேய்கள் கூழ் உண்ட களிப்பின் மிகுதியால் கூத்தாடி மகிழ்ந்தன. ஆடையையும் எறிந்து நின்றன. இரத்த வெள்ளத்தில் குதித்து விளையாடின. நிலத்தில் உருண்டு, புரண்டன. முதற் குலோத்துங்கன், கருணாகரத் தொண்டைமான், காளி தேவி, தேவர்கள், முனிவர்கள் அனைவரையும் வாயாரப் போற்றிப் புகழ்ந்து வாழ்த்தின.

கலிங்கத்துப் பரணி ஒரு பல்சுவைப் பெட்டகமாகவும், ஓர் உயிர் ஓவியமாகவும் திகழ்ந்து படிப்போருக்குக் குன்றா இன்பத்தைச் சொரிந்த வண்ணம் உள்ளது.



கவிஞர் சிவலிங்கம்

# ஊருக்கு வந்த மணப்பெண்

ஏ புள்ள
எப்போ வந்த
ஊரிலிருந்து...

இப்போதான்
வந்தன்...
நல்லா இருக்கீங்களா?...
நல்லாதான்
இருக்குறேன் என்றாள்...
பேச்சிக்கு...


உன் புருசனுக்கு
என்ன வேலை...

ஐயோ...
என்ன
கவுத்துட்டாங்க அத்த...

என் புருசனுக்கு வேலை
சூதாடறது...
திருடறது
குடிக்கிறது
புகைக்கிறது
பொண்ணுங்களோட
சுத்தறது...

அடப்பாவமே
அவனோட
எப்படி வாழப்போற
அதான் கட்டி வச்சிட்டாங்களே...
▫


24 HOUR FREE TAMIL CHANNEL
Athavan TV
நம்ம நட்சத்திரங்களின் அணிவகுப்பு
ஞாயிறு
1 pm
நினைத்தாலே இனிக்கும்
திங்கள் - வெள்ளி
6.30 pm
திங்கள் - வெள்ளி
7.30 pm
திங்கள் - வெள்ளி
8 pm
சனி
7 pm
திங்கள் - வெள்ளி
12 pm
கிச்சன்
ஞாயிறு
8 pm
ஜில் ஜங் ஜக்
ஞாயிறு
11 am
MOVIE
MATINEE
Athavan TV
செய்திகள்
மூன்றுவேளை பிரதான செய்திகள்
மணித்தியாலச் செய்திகள்
இலங்கையில் அனைத்து மாவட்டங்களிலும் செய்தியாளர்கள்
நேரடி களநிலைவரங்கள்
24 X 7 உடனுக்குடன் செய்திகள்
செய்தியும் அவற்றின் பின்னணியும் - ஆவணப்படங்கள்
ஆதவனின்
திசைகள்
Documentaries
ஆதவனின்
சிறப்பு பார்வை
பத்திரிகை
கண்ணோட்டம்
Satellite
Eurobird 9a | Freq 11766 | Vertical Symbol Rate 27500 | FEC 3/4
AUSTRIA 013 649 244
DENMARK 078 772 943
FRANCE 097 518 0123
GERMANY 0305 6837 0039
ITALY 0247 921 666
NETHERLAND 0202 410 161
NORWAY 021 988 897
SWITZERLAND 0435 082 375
SWEDEN 085 250 0208
SPAIN 0911 238 710
UNITED KINGDOM 0203 318 2004
E-MAIL sales@athavantv.com
WWW.ATHAVANTV.COM
You Tube



# உயிரா? மானமா?


'புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது' என்றொரு பழமொழி நாமனைவரும் கேட்டதே. ஆனால், இந்தப் பழமொழியை, சிறு விடயங்களில் விட்டுக்கொடுக்கும் மனம் இல்லாத சிலர் தம்முடைய பெருமைகளைப் பறைசாற்றுவதற்காகப் பயன்படுத்துவதையும் நாம் பார்த்திருக்கிறோம்.

ஊரிலே உறவினர்களுக்கிடையில் அவ்வப்போது சிறு தகராறுகள் வரும். கல்யாணம், காணி எல்லை என்று விதம்விதமான தகராறுகள் வரும். அப்படி வரும்போது, 'நான் அந்த முற்றம் மிதிக்கமாட்டேன், புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது' என்று ஒரு சாரார் வீரவசனம் பேசுவார்கள். பின், அந்தப் பகைவர் வீட்டில் யாராவது கடுமையான நோய்க்கு ஆளானால், அல்லது வேறு ஏதாவது முக்கிய நிகழ்வானால், இவரை அழைத்துச் செல்வதற்காக, சுற்றத்தவர், ஊர்ப் பெரியவர்கள் வந்து சமாதானம் பேசுவார்கள். 'மற்றவர்கள் சொன்னதனாற் போகிறேன்' என்று மற்றவர்கள், சுற்றியிருப்போரைக் காரணங்காட்டி அந்த வீட்டுக்கு, எக்காரணங் கொண்டும் போகமாட்டேன் என்றவர் போவார்.

அதனால் இது தற்பெருமைக்கான பழமொழியன்று. ஒவ்வொரு மனிதனும் தன் கொள்கையை, தன் மானத்தை எந்தச் சிக்கலான சூழ்நிலை வந்தாலும் விட்டுக்கொடுக்கக் கூடாது என்று கருதுவதே இந்த இடத்திலே பொருத்தமாக இருக்கும்.

'பசி வந்தால் பத்தும் பறந்துபோம்' என்பதும் கேட்டவொரு கூற்றுத்தான்.

மானங் குலங்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவமுயர்ச்சி தாளாண்மை தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம் [26]



என்ற நல்வழிவழிப் பாடலில், பசிவந்தால் பறந்துபோகும் பத்தில் ஒளவை மானத்தையே முதலில் வைத்தார். ஏனெனில் மானம் மனிதருக்கு முக்கியமானது. மானம் விலைமதிப்பற்றது. திருவள்ளுவரும்,

மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்

அதி 97 குறள் 9

என்பர். தன் உடம்பிலிருந்து மயிர் நீங்கினால் கவரிமான் எப்படி உயிர் வாழாதோ, அதுபோல மானம் உள்ளவர்கள் அந்த மானத்தைத் துறக்கவேண்டிவரின் அதற்குமுன் தாம் உயிர்நீப்பர். மானத்தை இழக்க விரும்பார்.

புலி ஒன்று பெரிய மதங்கொண்ட யானையைத் தன் உணவுக்காக அடித்து வீழ்த்தும். ஆனால் அந்த யானை தன் இடப்பக்கமாக வீழ்ந்துவிட்டால் அந்தப் புலி அந்த யானையை உண்ணாமல், பசியிருந்து உயிர்துறக்கும் என்பர். அதுபோல, கற்றறிந்த பெரியோர் தமக்கு மேலான தேவலோக வாழ்வு கிடைப்பதாயினும் மானம் அதன் விலையென்றால், அதை ஏற்கமாட்டார்என்று கூறுகிறது ஒரு நாலடியார் பாடல்.

கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும் இடமுடைய
வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் மழுங்க வரின் நாலடியார்

கடமா : மதங்கொண்ட யானை, தொலைச்சிய : வீழ்த்திய, வேங்கை : புலி, விழுமியோர் : சான்றோர்.


இடப்புறம் வீழ்ந்த யானையை உண்ணாது அந்த வேங்கை இறக்கும். சான்றோர்கள் எவ்வளவு உயர்ச்சி கிடைத்தாலும் மானத்தை விலையாகக் கொடுக்கமாட்டார்கள். உலகம் நீதி நெறியில் இன்னும் நடந்து கொண்டிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் மானத்தைப் பெரிதாக மதிக்கும் சான்றோர் இருப்பததான். 'புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்' என்ற புறநானூற்று அடிகளையும் இங்கு நோக்கலாம்.

■

# ஆன்மிகவாதிகளுக்கு
# அரிய சந்தர்ப்பம்

**தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் திருவிழா காலங்களில் சுவாமியை தரிசிக்கும் வாய்ப்பை நீங்கள் அடைய வேண்டுமா?**

## திருவிழா - சுற்றுலா



ஐப்பசி மாதம் 27ஆம் திகதி புறப்பட்டு கார்த்திகை 7ஆம் திகதி வரையிலான திருவிழா சுற்றுலா - திருச்செந்தூர் கந்தஷஷ்டியும் - அத்துடன் ஆறுபடை முருகன் கோவில்கள், திருவண்ணாமலை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் தரிசனமும் குறிப்பிட்ட இருக்கைகள் உள்ளதால் உங்கள் இருக்கையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.



தொடர்புகளுக்கு
**World Travel & Tour**
**020 84659888**
**020 84659666**

# அட்டைப்பட குறிப்பு



கௌரிகரன் தம்பதிகளின் ஏகபுத்திரியின் அரங்கேற்றம் லண்டன் லோகன் மண்டபத்தில் சிறப்பாக நடந்தேறியது.

அனுஷா சஜ்வ் அவர்களின் மாணவி. காலத்தின் ராமகிருஸ்ணா விஷ்வதாஸ் இந்திய பாடகர் அவர்களின் பாட்டில் நாட்டியம் களை கட்டியது.

பாவனி சங்கர் ஜலதரன், பரணவன் பாலகிருஷ்ணன் வரன்தேசன் சிவனேஷ் தந்தைய சிதம்பர நாதன் இவர்களின் வாத்திய இசை இனிமையாக இருந்தன.

மிகவும் தொய்வில்லாமல் ரசிக்கும் வண்ணம் நாட்டிய அரங்கேற்றம் நடந்தேறியது.













நல்ல பொருள்கள் வேண்டுமா கணேஷா தமிழ் கடைக்கு வாங்க

# Best Food

11-13 Ealing Road Wembley
Middlesex HAO 4AA Tel : 0208 9000100

364 - 366, Bath Road, Hounslow Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002, Fax : 020 8570 2323

259 - 261, London Road West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269, Fax : 684 4677




எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொருமாதமும் அதிரடி மலிவு விற்பனையாக
பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று
மலிவு விலை பொருட்களை பெற்றுக்கொண்டு கணிசமான பணத்தை சேமியுங்கள்

**நல்ல பொருள்கள் வேண்டுமா கணேஷா தமிழ் கடைக்கு வாங்க**







நல்ல பொருள்கள் வேண்டுமா கணேஷா தமிழ் கடைக்கு வாங்க




# FROM THU 06TH OCT - UK SHOW TIMES

**FROM THU 06TH OCT- AT CINEWORLD CINEMAS**

PREVIEW SHOWS ON THU 6TH OCT

LONDON FELTHAM @20:00, ILFORD @20:40, WEMBLEY @19:40

**FROM FRI 7TH OCTOBER**

FELTHAM, ILFORD, WANDSWORTH, ABERDEEN - QUEENS LINKS, ASHFORD, BIRMINGHAM - BS
BOLDON TYNE AND WEAR, BRADFORD, BRISTOL, CARDIFF, EDINBURGH, GLASGOW - SILVERBURN
BEXLEYHEATH, ENFIELD, WEMBLEY, LUTON, MILTON KEYNES, NEWPORT - FRIARS WALK, SHEFFIELD
STOCKPORT, STOKE-ON-TRENT, SWINDON - REGENT CIRCUS, TELFORD

HTTP://WWW.CINEWORLD.CO.UK OR CALL : 0871 220 1000

**FROM FRI 07TH OCT- AT VUE CINEMAS**

VUE CROYDON GRANTS, VUE ACTON, VUE CAMBRIDGE, VUE LEED THE LIGHTS, VUE OXFORD, VUE PORTSMOUTH
VUE READING, VUE SCUNTHORPE, VUE SWANSEA, NEWCASTLE, HULL, EDINBURGH OMNI CENTRE

HTTP://WWW.SAFARICINEMA.COM/ OR CALL - 0208 426 03 03

**FROM THU 06TH OCT - AT HARROW SAFARI**

PREVIEW SHOW ON THU 6TH OCT @ 8.00PM - FROM FRI 7TH OCT TO THU 13TH OCT - DAILY SHOWS

HTTP://WWW.SAFARICINEMA.COM/ OR CALL - 0208 426 03 03

**FROM THU 06TH OCT - AT EASTHAM BOLEYN**

PREVIEW SHOW ON THU 6TH OCT @ 8.00PM - FROM FRI 7TH OCT TO THU 13TH OCT - DAILY SHOWS

CALL : 020 8471 4884

**FROM THU 06TH OCT - AT PICCADILLY BIRMINGHAM**

PREVIEW SHOW ON THU 6TH OCT @ 8.00PM - FROM FRI 7TH OCT TO THU 13TH OCT - DAILY SHOWS

HTTP://WWW.PICCADILLYCINEMA.COM - OR CALL : 012 1771 0421

**FROM THU 06TH OCT - AT PICCADILLY LEICESTER**

PREVIEW SHOW ON THU 6TH OCT AT 8.00PM - FROM FRI 7TH OCT TO THU 13TH OCT - DAILY SHOWS

HTTP://WWW.PICCADILLYCINEMAS.CO.UK - OR CALL : 0116 251 8880

SUBJECTED TO CHANGES IN SHOW TIMES WITHIN ADVERTISE PERIOD

JOIN US ON YouTube www.youtube.com/ayngaraneurope www.facebook.com/ayngaran web: www.ayngaran.com https://twitter.com/ayngaran_intl

நல்ல பொருள்கள் வேண்டுமா கணேஷா தமிழ் கடைக்கு வாங்க







வண்டனில் 35 வருடமாக இறக்குமதியாகும்
தமிழர் உணவு வகைகள்

லீலா

தயாரிப்புகள்

*உற்பத்தியில் பெருமை, உபயோகிப்பதில் ஆனந்தம்*

புலம்பெயர்ந்த ஈழ மக்கள் இலண்டனுக்கு வந்த காலம் தொட்டு இன்று வரைக்கும் தொடர்ந்து இலண்டனில் விற்பனையாகும் லீலா தயாரிப்புகள்.

லண்டன் ஏக விநியோகஸ்தர்கள்

**Vaani Foods**

தொலைபேசி இலக்கம்
0208 668 7648

**நல்ல பொருள்கள் வேண்டுமா கணேஷா தமிழ் கடைக்கு வாங்க**

# செல்வராஜா

கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்

கோடைகால விடுமுறையை
முன்னிட்டு நகைகள், புடைவைகள்
அனைத்தும் நம்ப முடியாத
விலைக்கழிவில்

**கூறைப் புடைவகள்**
**பட்டுப் புடவைகள்**
**அனைத்தும்**
**40% விலைக்கழிவில்**



**SELVARAJA**
Gold House & Textile
Exclusive Designer Jewellery & Sarees

YOU ARE THE BEST FOR YOU
WE ARE THE BEST

**Tel: 020 8767 3795 Mob: 07825 005 269**
**162 B, Mitcham Road London SW17 9NJ**



Ilford பகுதியில் புதிய பல்பொருள் அங்காடி

# SRI STORE

இது காலமும் SRI FOOD & WINE
என்ற பெயரில் இயங்கிய எமது கடை
புதிய பெயரில் தொடர்ந்து தங்கள் சேவைக்காக

**396-400 Ilford Lane**
**Town Centre Ilford, IG1 2NB**
**Tel : 020 8553 7737**





## படித்துவிட்டீர்களா?

# சைவநீதி

உங்கள்
வீடுதேடி
இதழ் வர
சந்தாதாரர்
ஆகுங்கள்



**நல்ல பொருள்கள் வேண்டுமா கணேஷா தமிழ் கடைக்கு வாங்க**




நல்ல பொருள்கள் வேண்டுமா கணேஷா தமிழ் கடைக்கு வாங்க


MEGA
FESTIVAL
OFFER
Limited Stocks
SALE
BEST PRICE
BEST SERVICE
BEST QUALITY
FOOD
WORLD
YOUR ENTIRE HOME NEEDS AT
NEVER BEFORE SEEN PRICES
AVAILABLE AT ONE STOP SHOT
FOOD WORLD
117-119, London Road Mitcham,
surrey, CR4 2JA
Tel : 0208 6400 511
foodworld.co.uk

# கணேஷா தமிழ் கடை

## Ganesha Asian Supermarket

433 Bromley Road Downham BR1 4PH

**020 8698 0990**

Lewisham, Catford, Downham, Bromley
வாழ் மக்களுக்கு
ஒரு புதிய உதயம்

- இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்
- மளிகைப் பொருட்கள்
- மரக்கறிகள் பழங்கள்
- உடன் மீன் இறைச்சி வகைகள்
- குடிபானங்கள்
- வீட்டு உபயோகப் பொருட்கள்
- பூஜைப் பொருட்கள்

**அனைத்தையும் பெற்றுக் கொள்ள**
**இன்றே நாடுங்கள்**

விசேட விலைச்சலுகையில் ஏராளமான பொருட்கள்
இன்றே விரையுங்கள்